UK £1.00 France 10 FF Swis 3.00 SF Germany 3.00DM Canada $2.50



நினைத்துப் பார்க்கிறேன்
அந்தக்கால ஞாபகங்கள்

ஜூன் - ஜூலை 99 29 வது இதழ்

# ஈழகேசரி

ஆசிரியர்: ஈ.கே.ராஜகோபால்







## தமிழக சினிமாவில் லண்டன் ஆகாஷ்

# JAFFNA HOUSE

**Sri lankan and South Indian Restaurant**
**90 High Street, Tooting Broadway,**
**London SW 17**

**PHONE: 0181 767 6668/0181 672 7786**

வாடிக்கையாளரின் நிறைவான ஆதரவை
நெஞ்சில் நிறைத்து 8வது ஆண்டில்
காலடி எடுத்து வைக்கும்
எமது உணவகம் தனது நெஞ்சம் நிறைந்த
அன்பையும் நன்றியையும்
தெரிவித்துக் கொள்கிறது.



## Jaffna House

**Fully Licenced**
**TANDOORI RESTAURANT**
ENTRANCE COVERTON ROAD

**OPENING HOURS:**
**MONDAY TO SUNDAY 12 NOON TO MIDNIGHT**

# புத்தரே, வராதீர்!



கௌதம புத்தர்
ஒரு துறவியாக
திரும்ப வருவாரானால்
அது நல்லதல்ல!
அவர் 'தம்மபதம்' சொல்ல
முடியாத
விகாரைகள்
இலங்கையில் நிறையவே
உள்ளன
எவ்வளவு நியாயமானாலும்
தமிழர்களுக்கு
உரிமை மறுக்கப்படும்
அங்கே சிங்களமே பெரிதே தவிர
மனிதாபிமானம் அல்ல...
ஒன்றை மட்டும்
உறுதியாய் சொல்லலாம்...
புத்தர் பெருமானே!
நீர் திரும்ப வந்தால்
உன்னையும் உயிரோடு
எரித்து விட்டு
பழியைத் தமிழர்மீது போடுவார்..
இப்போதைக்கு
நீர் வராமல் இருப்பதே
இங்கு நல்லது!

மாத்தளைசோமு

# துரோகிகளே!

கண்ணீராலும்- இரத்தத்தாலும் எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழீழ வீர காவியத்தில் துரோகிகளுக்கான புதிய அத்தியாயம் ஒன்று ராசிக் என்பவனுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழினத்தின் மானத்தைக் காக்க தியாக வேள்வி ஒரு பக்கம். வாழ்வோடு போராடிக் கொண்டிருக்கும் தமிழர்கள் இன்னொரு பக்கம்.

இந்நிலையில் சிங்கள அரசின் எலும்புத் துண்டுகளைப் பொறுக்கி எடுத்து- சுவைத்து- அப்பாவித் தமிழ் மக்களை பயன்படுத்தி உல்லாச வாழ்வு வாழும் தமிழ் துரோகக் கும்பலின் அக்கிரமம். இவர்களை இனியும் நடமாட அனுமதிக்க முடியாது என்ற பகிரங்கமான அறிவிப்புக்கு தலை வணங்குகிறோம்.

'ராசிக் குழு' என்று கூறிக் கொண்டு தமிழர்மீது அங்கு நடத்தப்பட்ட கொடூரங்களை நினைக்கவே நெஞ்சம் கொதிக்கிறது.

விடுதலைக்கு ஆதரித்தவர்களைக் காட்டிக் கொடுத்து துன்பப்படுத்தினார்கள். கொன்று குவித்தார்கள்.

இதனால் இந்தத் துரோகக் குழுக்களுக்கு விடுதலைப் புலிகள் இறுதி எச்சரிக்கையை விடுத்தார்கள்.

**'துரோகிகளே! உங்கள் தேசத் துரோக நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது' என்ற நீண்ட அறிக்கையை வெளியிட்டனர்.**

துரோகச் செயல்களைக் கைவிட்டுப் பொது வாழ்வில் இணைந்து கொள்ளலாம் அல்லது போராட்டத்தில் இணைந்து கொள்ளலாம் என்ற இந்த அழைப்பு துரோகக் குழுக்களை நடுநடுங்க வைத்திருக்கிறது. சாதாரண உறுப்பினர்கள் மத்தியில் தெளிவு பிறக்க வைத்திருக்கிறது.

'துரோகிகளே- நீங்கள் எங்குமே தப்பி ஓட முடியாது. காற்றுப் புககங கூடிய இடமெல்லாம் விடுதலைப் புலிகள் புகுந்து விடுவார்கள்'' என்று எச்சரித்த இந்த அறிக்கையில்- ''ஆடம்பரமான -இன்பமான -உல்லாசமான வாழ்க்கைக்கு அப்பாவிகளான உங்களைப் பயன்படுத்தகின்றன'' எனத் துரோகக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு விளக்கப்படுத்தப்பட்டுள்ளது.

'உலகத் தமிழினமே போற்றி நிற்கும் ஒரு அற்புதமான தலைவரை இந்த வரலாற்றுக் காலத்திலேயே பெற்றிருக்கிறோம். வெல்ல முடியாத ஒரு செயல்பாட்டுக்கு -போலித் தனமான நம்பிக்கையுடன் உங்களை நீங்களே அழித்துக் கொள்ளுவதை நிறுத்தி- பொது வாழ்வில் இணைந்து கொள்ளுங்கள். அல்லது போராட்டத்தில் இணைந்து கொள்ளுங்கள்' என்று தேசக் நீட்டப்பட்டுள்ளது.

தனது சுயநலத்துக்காக பல அப்பாவிகளைப் பலிகடா ஆக்கிய ராசிக். இந்தத் துரோகக் கும்பலுக்கு ஒரு பாடம்.




### மனம் விட்டு...
### மனநிறைவு

Hot Spring ஆசிரியர் எஸ். சிவநாயகம் அவர்களின் 'மனம் விட்டு...' உண்மையி லேயே மனதை விட்டு அகலவில்லை. இலட்சியப் பயணத்தை நெறியாகக் கொண்ட ஒரு பத்திரிகையாளன்- எழுத்தாளன் எத்தகைய இழப்புக்களையும் - எத்தகைய துன் பங்களையும் தொல்லைகளையும் தாங்கிக் கொள்ளவேண்டி யிருக்கிறது. இவ் வுலகம் சிவநாயகத்தை நன்றியுணர்வோடு நினைவில் கொள்ளாவிட்டாலும் - அவர் தன்னளவில் பெறும் மன நிறைவே மிகப் பெரிய பலனாக அமையும்.

*-வீ. செல்வராஜ்*
46, Jalan ss4c/8, 47301 Petaling Jaya, Selangor, Malaysia

### மலரைப் படித்தேன்...
### தழுவத் தோன்றியது

'ஈழகேசரி' வருகிறது என்ற இனிப்பான செய்திக்குள் மூழ்கி மகிழ்ந்தேன். இதழ்களைப் படித்தபோது... ராஜகோபால் என்ற மனிதரைக் கட்டித்தழுவத் தோன்றியது. வாழ்க உங்கள் பத்திரிகைப் பணி.

*-ஜோர்ஜ்*
98, Holland Road, London E6 2EP

### ஆத்மாவிலிருந்து
### ஆனந்த அதிர்ச்சி

நீங்கள் அனுப்பிய 'ஈழகேசரி' இதழ்கள் பெற்றேன். மீண்டும் 'ஈழகேசரி' இதழ்கள் கையில் கிடைத்ததும் - அதிர்ச்சியும்- ஆனந்தமும் ஆத்மாவிலிருந்து எழுந்தன.
கடந்த 15 வருடங்களாகச் செஞ்சிலுவைச் சங்கத்தில் இளைஞர் பகுதி வழி நடத்துனராக வேலை செய்கிறேன். வயது 61. எம் இனத்துக்கு முடிந்த பங்களிப்பைச் செய்து வருகிறேன். நரம்புத் தளர்ச்சி- குடற்புண் போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்டிருப்பதால் கடந்த காலங்களில் 'ஈழகேசரிக்' வளர்ச்சிக்குப் பலரை அறிமுகப்படுத்திய பணியைத் தொடர்ந்து செய்ய முடியாதுள்ளேன். இனித் தவறாது எனக்கு ஒரு 'ஈழகேசரி'யை அனுப்பி வையுங்கள். எனது சந்தா ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து தங்கள் தன்னலமற்ற பணி வளர வாழ்த்துகிறேன்.

*- சி. வேலாயுதம்*
Stephan Str- 32, 10559 Berlin, Germany

### தரமான ஒரு தமிழ் ஏடு

நீண்ட கால இடை வேளைக்குப் பின்னர் மீண்டும் இழகேசரி இதழ்கள் கண்ட மகிழ்ந்தேன். இடம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் இலக்கிய வேட்கையை ஈடு செய்யும் தரமான ஒரு தமிழ் ஏடு இல்லையே என்ற குறையை 'ஈழகேசரி' நிறைவு செய்கிறது.

-டாக்டர் எஸ். தியாகராஜன்
1, Park Court, Park Road, Worthing BN11 2AW

### சிரமத்துக்கு மத்தியில்
### வெளியிடும் சஞ்சிகை

'ஈழகேசரி' இதழைப் பெரும் சிரமங்களுக்கிடையில் நீங்கள் வெளியிடுவதாக அறிந்தேன். மலேசியாவின் முன்னணி தமிழ்வார இதழான 'மக்கள் ஓசை' நிருபர் ம. யோகலிங்கம் அவர்கள் மூலம் 'ஈழகேசரி' பற்றி அறிந்தேன். உங்கள் தமிழ்ப் பணிக்கு எங்கள் பாராட்டுக்கள்.

*-ஏ. குணநாதன்*
1614, Yang Ming Garden, 45600 batang berjuntai, Selangor Darul Bhsan, Malaysia

### பத்திரிகையாளராகவே
### சாவோம்

'ஈழகேசரி' மீண்டும் வருவது நல்ல செயற்பாடாகும்- நமது தொடர்புகளுக்கு ஒரு சாதனம் அவசியம். சாகும் வரை நாம் பத்திரிகையாளர்களாகவே இருந்து சாவோம்.

*-அந்தனி ஜீவா*
16, Mulgampola Road, Kandy, Sri-Lanka

### நினைத்துப் பார்க்கிறேன்...

'ஈழகேசரி' தொடர்ந்து வெளிவருகிறது என்று நினைக்கிறேன். முதல் இதழ் தவிர ஏனைய இதழ்களைப் பார்க்க முடியவில்லை. ஒரு காலத்தில் நீங்களும் நானும் ஒன்றாகவே யாழ். 'ஈழநாடு'வில் பணியாற்றிய காலத்தை இப்போது நினைத்துப் பார்க்கிறேன்...

*- தேவகாந்தன்*
*(ஆசிரியர்- 'இலக்கு')*
87, Pajanai Koil Street, Choolaimedu, Chennai- 600 094, India

### தமிழீழ உணர்வு-
### உள்ளம் பூரித்தது

தங்கள் தமிழீழ உணர்வு குன்றிவிட்டதோ என்ற ஐயப்பாடு இடையே ஏற்பட்டது. ஆனால் மே 99 இதழில் அட்டை முதல் உள் பக்கங்கங்களில் தலைவர் படங்களுடன் கட்டுரைகளை வெளியிட்டு உங்கள் உணர்ச்சியை வெளிக்காட்டிவிட்டீர்கள்.

கே. ராஜலிங்கம்
43, Gilby Road, London NW6 2TA

### ஈழத்து எழுத்தாளர்
### மு. கனகராஜன்
### மறைவு

'ஈழகேசரி' இதழ்கள் தொடர்ந்து கிடைக்கின்றன. வீணாக நட்டப்பட வேண்டாம். சஞ்சிகைகள்- ஏடுகள் அளவுக்கு மீறிப் பெருகிவிட்டன. யார் படிக்கிறார்கள் என்பதுதான் தெரியவில்லை? சஞ்சிகையினால் நட்டம் வருமானால்- நிறுத்தி விட்டு உருப்படியாக வருடம் ஒரு புத்தகம் வெளியிட ஒழுங்கு செய். உனது பத்திரிகை உலக அனுபவங்களைத் தொகுத்து எழுதலாமே.
கொழும்பில் எழுத்தாளர் மு. கனகராஜன் மறைவுச் செய்தி நெஞ்சை வருத்துகிறது. 1997 இல் கொழும்பு சென்றபோது- கனகராஜனையும்- அவனது மனைவியையும் அழைத்துக்கொண்டு 'அம்பாள் கபே'யில் உணவு சாப்பிட்டேன். இதுதான் இறுதிச் சந்திப்பு. எப்படியோ இருந்திருக்க வேண்டிய திறமைசாலி. திசைமாறி- திசைமாறி இறுதியில் நோயாளியாக இறந்து விட்டான். எழுத்தாள நண்பர்கள் பலரும் இறுதியில் அவனைப் பார்க்கப் போகவில்லை என்பதை அறியும்போது மிகவும் துக்கமாக இருந்தது. பாவம்- அவன் மனைவி இருந்தமையால்தான் இவ்வளவு காலமும் சீவித்திருக்கிறான். நீர் கொழும்பில் நீயும் நானும் அவனும் ஒரு பாயில் படுத்துறங்கியது யாவும் ஞாபகத்துக்கு வந்து மனதைப் பாரமாக்குகிறது. வாழ்வே மாயம்தான். எங்களோடு வாழ்ந்த பெரி. சண்முகநாதன் போய்விட்டான். இப்போது மு.க...

*-லெ. முருகபூபதி*
170, Hothlyn Drive, Cragieburn, Victoria 3064, Australia

# ‘உயிர்த்தெழும்’ புதைகுழிகள்

செம்மணியில் முதல் புதைகுழி தோண்டப்பட்ட இரண்டு மணித்தியாலங்களில் இறந்து போன இரண்டு தமிழர்கள் ‘உயிர்த்து’ எழுந்துள்ளார்கள்.

முதலில் ஒரு கால். அடுத்து கொழுப்புப் படிந்த நீலக் காற்சட்டை. கொலை செய்து புதைக்கு முன் கைகள் பின்னால் கட்டப்பட்டு- கண்களை மூடித் தலைக்குப் பின்னால் கட்டப்பட்ட துணியின் முடிச்சு அப்படியே அவிழாமல் இருக்கும் எலும்புக் கூடு. அதன் தலை மண்டை ஓட்டில் ஒரு பெரிய ஓட்டை. இரண்டாவது எலும்புக் கூட்டின் கைகள் முன் பக்கம் கட்டப்பட்டு இருந்தது.

மொத்தம்- இரண்டு எலும்புக் கூடுகள். இரண்டும் நாலடி ஆழத்தில் - அடுத்து அடுத்தல்ல. ஒன்றுக்கு மேல் ஒன்று. இரண்டுக்கும் இடையில் ஒரு புகையிரதச் சிலிப்பர் கட்டை..

செம்மணியில் மனிதப் புதை குழிகள் இருப்பதை முதன் முதலில் ஒரு வருடத்துக்கு முன்னர் கிருஷாந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட சிப்பாய் சோமரத்தின ராஜபக்ச வெளியிட்டான்.

‘‘செம்மணியில் கிருஷாந்தி- அவரது தம்பி பிரணவன்- தாயார் ராசம்மா குமாரசாமி, அயலவர் சிதம்பரநாதன் மட்டுமல்ல, இன்னும் பலர் - 300 முதல் 400 பேர் வரை புதைக்கப்பட்டுள்ளார்கள். நான் கிருஷாந்தியையோ, மற்றவர்களையோ கொலை செய்யவில்லை. எனது மேலதிகாரிகள் கொன்று விட்டுக் கொண்டு வந்த சடலங்களை அவர்களின் கட்டளைப்படி புதைப்பதுதான் என் வேலை’’ என்பதுதான் சிப்பாய் ராஜபக்சா கொழும்பு நீதிமன்றத்தில் கொடுத்த வாக்கு மூலம்.

ஓராண்டு வரை இழுத்தடித்த சந்திரிகா மனித உரிமை அமைப்புகள் கொடுத்த அழுத்தத்துக்கு தாக்குப் பிடிக்க முடியாத நிலையில் புதைகுழிகள் தோண்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இப்போது ராஜபக்சாவின் வாக்குமூலம் முழுக்க முழுக்க உண்மை என்பதைச் சான்று பகரத் தொடங்கியுள்ளன.

மூன்று குழந்தைகளின் தந்தையான இருபத்தெட்டு வயது இராசையா சதீஷ் குமாரின் எலும்புக் கூட்டை அவரது மனைவி சாந்தினி அடையாளம் காட்ட இருபத்தி மூன்று வயதான மகேந்திரன் பாபுவின் எலும்புக் கூட்டை அவரது தந்தையார் அடையாளம் காட்டினார்.

‘‘செம்மணியை விட அரியாலையிலும் புதைகுழிகள் உண்டு. மொத்தம் 16 புதை குழிகள் உண்டு. அதில் பத்தை என்னால் அடையாளம் காட்ட முடியும். ஐந்தை உதவி பொலிஸ் அதிகாரி பெரேராவால் காட்ட முடியும். எஞ்சிய ஒன்றை -அது ஒரு கோவில் அருகில் உள்ளது. அதனை மரண தண்டனை பெற்ற இன்னொரு சிப்பாயினால் அடை யாளம் காட்ட முடியும்’’ - தீவிர சிங்கள இன வெறியர்களினால் தனது குடும்பத்துக்கு விடுக்கப்பட்டு இருக்கும் கொலை மிரட்டலையும் பொருட்படுத்தாது- ராஜபக்சா யாழ். குடா நாட்டில் ராணுவத்தினரால் அடித்துக் கொலை செய்யப்பட்டு- புதைக்கப்பட்ட தமிழர்களது பெயர்பட்டியலை தன்னால் தர முடியும் என்று கூறி- அந்தக் கொலைகளுக்குப் பொறுப்பான ராணுவ அதிகாரிகளது பெயர்களைப் பகிரங்கப் படுத்தினான்.

தனது ஒரு மணித்தியால நீண்ட வாக்குமூலத்தல் பல கொலைகளை விபரித்த ராஜ பக்சா- அரச ஊழியர் செல்வரத்தினம் ராணுவத்தால் கைது செய்யப்பட்டதையும்- பின் அவரைத் தேடி வந்த அவரது மனைவியும் அவரும் ஒரே நேரத்தில் ஒன்றாக அடித்துக் கொலை செய்யப்பட்டதையும் குறிப்பிட்டான்.

‘‘ஒருநாள் ஒரு மண் வெட்டியை எடுத்து வருமாறு கப்டன் லலித் ஹேவா என்னைப் பணித்தார். நான் அங்கு சென்ற போது - நிர்வாணகோலத்தில் ஒரு பெண்- அவருடன் கப்டன் ஹேவா நின்று கொண்டு இருந்தார். அந்தப் பெண்ணும் அவரது கணவனும் அந்த முகாமுக்கு கொண்டு வரப்பட்டு இருந்தனர். கப்டன் ஹேவா அந்தப் பெண்ணை கணவன் முன்னிலையிலேயே கதறிக் கெஞ்சி அழ அழ கற்பழித்தார். பின் நான் கொண்டு வந்து கொடுத்த மண்வெட்டியினாலும் பொல்லுகளாலும் இருவரையும் தாக்கினார். இருவரும் இறந்து போனார்கள்’’

-இது ராஜபக்சாவின் வாக்குமூலத்தில் இருந்து ஒரு பகுதி. சொல்லப்பட்டவை இவை. இன்னும் சொல்லப்படாத, ராஜபக்சாவுக்கு தெரியாத கொலைகள் எத்தனையோ?

ராஜபக்சாவின் வாக்குமூலத்தைப் பற்றிக் கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாணப் பாதுகாப்புப் படை கொமாண்டர் மேஜர் ஜெனரல் லோகன் குணவர்த்தனா ராஜபக்சாவின் வாக்குமூலத்தை எள்ளி நகையாடியுள்ளார். ‘‘அவன் (ராஜபக்சா) ஒரு இடியப்பச் சிக்கலில் மாட்டியுள்ளான். அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. எனவே தன்னோடு தனது உயர் அதிகாரிகளையும் கொலைகளில் சிக்க வைக்க முயற்சிக்கிறான்’’ என்கிறார்.

கிருஷாந்தி பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டது- அவரைத் தேடிச் சென்ற அவரது தாயார்-தம்பி அயல் வீட்டுக்காரர் கொலை செய்யப்பட்டது தொடர்ச்சியாக மக்கள் செய்த பலத்த கிளர்ச்சி காரணமாகவே ராஜபக்சா உட்பட 7 ராணுவத்தினர் 2 பொலிஸ்காரர்கள் மீது கொலைக் குற்றஞ்சாட்டப்பட்டு- வழக்குத் தொடரப்பட்டது. அல்லாவிட்டால் ஏனைய கொலைகள் போன்று இவையும் மறைக்கப்பட்டு இருக்கும்.

‘‘ஸ்ரீலங்கா ராணுவம் கட்டுப்பாடு இல்லாத காட்டுமிராண்டி ராணுவம் அல்ல. ராணுவத்துக்குள் கட்டுப்பாடுகள் நிலைநாட்டப்பட்டு, மக்கள் சிநேக ராணுவமாக, தமிழ் மக்களது உள்ளங்களை வென்றெடுக்கக் கற்றுக் கொடுக்கப்பட்ட ராணுவமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது’’ என்று வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் நாடு நாடாகச் சென்று பிரச்சாரம் செய்து வந்தெல்லாம் பச்சைப் பொய் என்பது நிரூபணமாகிவிட்டது.

மனித உரிமைகள் என்று வரும்போது உலக நாடுகள் தமிழ் மக்கள் பிரச்னையில் ஒரு விதமாகவும், கொசோவோ அல்பேனியர்களை வேறு விதமாகவும் நடத்துகிறது.

சேர்பியா நாட்டு ஜனாதிபதி சுலோபடன் மிலேசொவிக்கை இனப்படுகொலை செய்த குற்றச்சாட்டில் அகில உலக நீதிமன்றத்தில் நிறுத்த நடவடிக்கை எடுக்கும் உலக நாடுகள் -ஜனாதிபதி சந்திரிகாவின் படுமோசமான மனித இன உரிமை மீறல்களையும் இனச் சுத்திகரிப்பையும் கண்டும் காணாதது போல் இருந்து விடுகின்றன.

ஆக- தமிழ் மண்ணில் சிங்கள ராணுவத்தின் மேலாண்மை இருக்கு மட்டும் கைது, சித்திரவதை, சிறை, கொலை, பாலியல், வன்முறை இவற்றைத் தவிர்க்க முடியாது. புதை குழிகளில் புதைக்கப்படுவது, தொடர் கதையாகவே இருக்கும்.

சுதந்திர தமிழீழத்தை உருவாக்குவதன்மூலமே தமிழ் மக்களின் பாதுகாப்பு, சுதந்திரம், சுபீட்சம் ஆகியவற்றை உறுதி செய்ய முடியும்.

- நக்கீரன்

இங்கிலாந்து தேசத்தில் ஆசிய நாட்டவர்களின் மிகப் பெரிய சொலிசிட்டர் நிறுவனமான லண்டன் - ரூட்டிங்கில் திகழும்

திரு ராஜா தவராஜாவின்.

# ராஜா அன் கோ

குற்றவியல் வழக்குகளில் நிபுணத்துவமும்
அதிகப்படியான வழக்குகளில் வெற்றியும் அகதிகள்
வழக்குகளில் கூடியளவு வெற்றியும் பெற்ற நிபுணர்கள்
கொண்ட சட்ட நிறுவனம்

Recognised by the Legal Aid Borad as provider of quality Legal services

# RAJA & CO

**SOLICTORS**

Administrators of Oaths

## THE LARGEST ASIAN LAW FIRM IN THE UK

WE HAVE EXPERTS IN EVERY FIELD OF LAW WHO SPEAK ALL ASIAN LANGUAGES.

IMMIGRATION - WE HAVE A VERY HIGH RATE OF SUCCESS

CRIME - WE HAVE EXPERTS WITH WIDE EXPERIENCE IN CRIMINAL LAW

MATRIMONIAL - INJUNCTIONS, CHILD CARE ETC.

CIVIL LITIGATION

LANDLORD AND TENTANT

WELFARE

CONVEYANCING


# RAJA & CO

## SOLICITORS

295, BALHAM HIGH ROAD, LONDON SW17 BA

**TEL: 0181 682 2585**

**FAX: 0181 682 2575**



பாலச்சந்தரின் 'கவிதாலயம்' தயாரித்துள்ள 'ரோஜாவனம்' படத்தில் ஆகாஷ் தன் காதலின் அடையாளமாக லைலாவுக்கு ரோஜா கொடுக்கிறார்.

# தமிழக சினிமாவில் காலடி பதிக்கும் லண்டன் ஆகாஷ்

சினிமாவில் நடிக்க வேண்டும் என்று ஏங்கியவரல்ல. ஆனால் அவரை இப்போது தமிழக சினிமா அணைக்க ஆரம்பித்துள்ளது.

லண்டனில் வசதியான குடும்பத்தில் பிறந்து - லண்டன் பல்கலைக் கழகத்தில் கம்பியூட்டர் சயன்ஸ் படித்து பிஎஸ்சி 2nd Class upper Hons பட்டம் பெற்று - அமெரிக்கன் கம்பனியில் சிஸ்ரம் என்ஜினியராக இரண்டாண்டு களாகப் பணியாற்றிக் கொண்டிருந்த நம்மவருக்கு எடுத்த எடுப்பிலேயே இயக்குர் சிகரம் பாலசந்தரின் படத்தில் வாய்ப்புக் கிடைத்திருக்கிறதைப் பற்றி பெருமை ப்படாமல் இருக்கலாமா?

இன்றைய தமிழக சினிமாவில் சக்கை போடு போடும் ரஜனிகாந்துக்கு பெயர் சூட்டி - அவருக்கு 'மூன்று முடிச்சு'ப் போட்டவர் பாலச்சந்தர். அந்தக் கைராசிக்காரர்தான் லண்டனில் இருந்து ஜெயசதீஷ் என்ற 'ஒரிஜினல்' பெயருடன் சென்றவரை தமிழக திரைவானுக்கு 'ஆகாஷ்' என்ற பெயரை சூட்டி பவனி வரச் செய்திருக்கிறார்.

தமிழகசினிமாவில் இன்றைய இளம் நாயகர்களாக மின்னும் விஜய்- அஜித்- அப்பாஸ் போன்ற மிக வயதில் குறைந்த ஹீரோக்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய ஒருவராக ஆகாஷ் வருவார் என்ற நம்பிக்கையை இவரது முதல் படம் தந்திருக்கிறது. இயற்கையான நடிப்போடு- இவரது கவர்ச்சியான தோற்றமும் இணைந்து இவரை ரசிகர்கள் இதயங்களில் நிறுத்திவைக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

லண்டன் வூய்ஷாம் பகுதியில் கற்போட் என்ற இடத்தில் பிரபலமானவர் ஈஸ்வரன். வழக்கறிஞரான இவர் சட்ட நிறுவனம் நடத்துகிறார். இவரது மகன்தான் இப்போது ஆகாஷ் என்று சினிமாவில் பெயர்மாற்றம் பெற்றவர்.

லண்டனில் உள்ள மிடில்செக்ஸ் பல் கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்த இவர் சிறு வயதில் இருந்தே டான்ஸ் ஆடுவதில் ஆர்வம் கொண்டவர். எந்த நிகழ்ச்சி என்றாலும் இவர் டான்ஸ் இல்லாமல் இருக்காது.

வீட்டிலே செல்லமாக வளர்ந்தாலும்- எடுத்த கருமத்திலே நினைத்ததை முடிப்பவர். கம்பியூட்டரிலே புலியான இவருக்கு சிஸ்ரம் என்ஜினியர் வேலையை அமெரிக்க நிறுவனம் வழங்கியபோது- நல்ல சம்பளத்தையும் அள்ளிக்கொடுத்தது.

அப்படி வேலை செய்து கொண்டிருந்தபோதுதான் விடுமுறையைக் கழிக்க தமிழகம் சென்றார். திருச்சியில் இவரது உறவினர்கள் இருந்தார்கள்.

அப்போதுதான் சுஹாசினியின் தொடர்பு கிடைத்தது. இவரைத் தாம் பயன்படுத்த வேண்டும் என்றுதான் முதலில் மணிரத்தினமும் சுஹாசினியும் விரும்பினார்கள். பின் பாலச்சந் தருக்கு ஒரு புதுமுகம் தேவை என்பதனால்- அவரின் 'கவிதாலயம்' நிறுவனத்துக்கு அறிமுகம் செய்து வைத்திருக்கிறார். பாலச்சந்தருக்கும் இவரை நன்றாகவே பிடித்துவிட்டது.

பாலச்சந்தரின் 'ரோஜாவனம்' படத்தில் நடிக்க இவர் தேர்வானார். ஆகாஷ் திரைக்கு வந்த சுருக்கமான 'கதை' இதுதான்.

இந்தி நடிகரைப்போன்ற இயற்கையான கவர்ச்சிச் சாயல் கொண்ட இவரிடம் உள்ள 'இளமை' அழகை எப்படிச் சொல்வது?

பார்த்த மாத்திரத்திலேயே கவர்ந்திழுக்கும் வாலிபத்தின் கவர்ச்சி அவரிடம் குடி கொண்டிருக்கிறது.

இருபத்தாறு வயததான். ஆனாலும் தன்னைக் காதலிக்கும்படி கேட்ட இளம் சிட்டுகள் எத்தனைபேர் என்று அவருக்கே கணக்குச் சொல்ல முடியாது.


இளசுகளின் இதயங்களில் இலகுவாக இடம் பிடித்துவிடுகிற சக்தி இவரின் தனித்துவம்.

'கவிதாலயம்' தயாரித்து- செல்வா டைரக்ஷனில் ஜூலை இறுதியில் வெளிவரவுள்ள 'ரோஜாவனம்' படத்தில் கார்த்திக் கதாநாயகன். இரண்டாவது கதாநாயகனாக வருகிறார் ஆகாஷ்.

நிழல்கள் ரவி- ரவிக்குமார்- மாளவிகா- லைலா- எம்.எஸ். விஸ்வநாதன் ஆகியோர் நடிக்கின்றனர்.

ஆகாஷ் நிழல்கள் ரவியின் மகன். லைலா ரவிக்குமாரின் மகள். பால்ய தொடர்புகள் நிச்சியார்த்தத்தில் முடிகிறது. இடையில் நிழல்கள் ரவி அமெரிக்கா செல்கிறார். ஆகாஷ் லைலாவைச் சந்திக்கின்றார்.

நிழல்கள் ரவி ஸ்தாபித்த ஆசிரமம் 'ரோஜாவனம்'. அங்கு கார்த்திக் காவல்காரன்.
கார்த்திக்கும் லைலாவுக்கும் காதல்.



ஆகாஷ் கூட வந்த லைலா கார்த்திக்குடன் என்ன காதல் ரகசியம் பேசுகிறாரோ?

ஆனால் ஆகாஷ் லைலாவை காதலிக்கிறார். கார்த்திக் தன் காதலை தியாகம் செய்கிறார். -இதுதான் 'ரோஜாவனம்' கதை.

சுவிஸில் படப்பிடிப்பை முடித்துவிட்டு லண்டனுக்கு வந்திருந்தபோது ஆகாஷ் நீண்ட நேரம் என்னுடன் ஆற அமர இருந்து பேசினார்.

அவரிடம் அமைதி- அடக்கம் இருந்தது. வாலிபத்தின் வாசல் அவரை முத்தமிட்டுக் கொண்டிருந்தாலும் அவரிடம் ஒரு Maturityயை நான் பார்த்தேன். எந்தத் துறையில் அவர் காலடி பதித்தாலும் வெற்றிகள் அவரை வந்து குவியும் என்பதை சில நிமிடங்கள் பேசியபோதே தெரிந்து கொண்டேன்.

தமிழ்நாட்டில் இப்போது தங்கியிருக்கும் இளைஞர் ஆகாஷ் குறுகிய காலத்தில் தமிழ் சினிமாவில் புகழ் பெற்று ஜொலிக்கும் நட்சத்திரமாகத் திகழ்வார் என்பதற்குச் சாட்சியாக அவர் நடித்த படம் வெளியாகிற கையோடு- இன்னொரு அதிர்ஷ்டமும் அவரைத் தேடி வந்திருக்கிறது. அடுத்த படத்தில் அவர்தான் 'ஹீரோ'. -ராவண்ணா

## 14.7.99 'இந்தியா டுடே':'ஆகாஷ் 'ஹைடெக்' ஹீரோ'



### வலையில் விழுந்தவர்

தினத்தந்தியில் விளம்பரம் செய்து புதுமுகத்தைத் தேடியது; கல்லூரி வாசல்களில், பஸ் ஸ்டாப்களில் நாயகியைக் கண்டெடுத்தது - இதெல்லாம் அந்தக் காலம். இப்போது இன்டர்நெட் யுகம். கம்ப்யூட்டர் வழியே கதாநாயகர்கள், நாயகிகள் கண்டெடுக்கப்படுகிறார்கள். மணிரத்னத்தின் நிறுவனமான மெட்ராஸ் டாக்கீஸின் வெப்சைட்டில் புதுமுகம் தேவை விளம்பரம் மூலமாக கோலிவுட்டில் நுழைகிறார் ஆகாஷ். லண்டனில் வசிக்கும் தமிழர். பிறந்தது, வளர்ந்தது, படித்தது, வேலை பார்ப்பதெல்லாம் லண்டனில். கம்ப்யூட்டர் புலி. பன்னாட்டு நிறுவனம் ஒன்றில் கம்ப்யூட்டர் இன்ஜினியர். சம்பளம் சில லகரங்கள், பொழுதுபோக்கு, டான்ஸ் ஆடுவது. இது அவரை சினிமாவிற்கு இழுத்து வந்திருக்கிறது. வெப்சைட் விளம்பரத்தைப் பார்த்து விண்ணப்பிக்க, சுஹாசினி மணிரத்னம் அவரைத் தேர்ந்தெடுத்து இயக்குனர் கே. பாலசந்தரிடம் அனுப்பியிருக்கிறார். அவருடைய ரோஜா வனம் படத்தில் ஆகாஷ் இரண்டாவது ஹீரோ. சாதா ஹீரோ இல்லை, ஹைடெக் ஹீரோ.

# ஆனந்த பூங்காற்றே

படத்தில் இரண்டு கதாநாயகர்கள், இரண்டு கதாநாயகிகள் இரண்டு வில்லன்கள். இவை எல்லாவற்றையும் விட முக்கியமானது இரண்டு கதைகள். இப்படிப் பல இரண்டுகளை ஒன்றாக்கி உருவாக்கப்பட்டிருக்கிறது படம்.

பாட்டு கற்றுக்கொடுக்கும் குருவிடம் மிகுந்த பாசத்துடன் பழகுகிறாள் ஒரு மாணவி. குருவின் குழந்தை மேல் அளவு கடந்த அன்பு செலுத்துகிறாள். இதனால் அவர்கள் இருவருக்கும் கள்ளக் காதல் என்று ஊர் பேசுகிறது. இல்லையில்லை திட்டமிட்டுப் பேச வைக்கப்படுகிறது. மாணவியின் திருமண நிச்சயத்துக்கு வருவதாகச் சொன்ன குரு, கள்ளக் காதல் என்று கிளம்பியுள்ள வதந்தியைக் கேட்டு உடைந்து போய் ஊரைவிட்டுப் புறப்படுகிறார். இதைக் கேள்விப்படும் மாணவி தொடர்வண்டி நிலையத்துக்கு வந்து குருவை நிச்சயதார்த்த நிகழ்ச்சிக்கு வந்து விட்டுத்தான் போக வேண்டும் என்று அழைக்கிறாள். வாத்தியாரோடு ஓடிப் போய்விட்டாள் என்று மீண்டும் ஒரு வதந்தி கிளப்பப்பட தொடர் வண்டி நிலையத்துக்கு வந்த ஊர்ப்பெரிய மனிதரான மாணவியின் தந்தை அடியாட்களை ஏவி குருவைக் கொலை செய்கிறார். வெகுண்டெழுந்த மாணவி விதவைக் கோலம் பூண்டு குருவின் குழந்தையோடு தனியே வாழ்கிறாள்.

தனியார் கம்பெனி ஒன்றில் பணிபுரியும் துடிப்பான இளைஞன் ஜீவா. நண்பர்களோடு வாடகைக்கு அறை எடுத்துத் தங்கியிருக்கிறான். அவர்கள் இருக்கும் வீட்டின் கீழ்த் தளத்தில் ஒரு இளம் விதவை தன் குழந்தையுடன் வசித்து வருகிறாள். அந்த விதவையைக் காதலிக்கிறான் ஜீவா. அவளையே திருமணம் செய்துகொள்ள விரும்புகிறான். இந்நிலையில் ஜீவாவை ஒரு பணக்காரப் பெண் தீவிரமாகக் காதலிக்கிறாள். மணந்தால் ஜீவாவைத்தான் மணப்பேன் என்கிறாள். ஜீவா அப்பெண்ணை வெறுத்து ஒதுக்குகிறான். அப்பணக்காரப் பெண்ணின் தந்தை மகளின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக, ஜீவா நேசிக்கும் இளம் விதவையின் குழந்தையைக் கடத்திக் கொண்டு போகிறார். குழந்தையை விடுவிக்க வேண்டுமானால் நீ என் பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று மிரட்ட, குழந்தையைக் காப்பாற்ற திருமணத்துக்கு ஒப்புக் கொள்கிறான் ஜீவா. இந்தச் செய்தியைத் தாமதமாக அறிந்துகொண்ட மணப்பெண் மணமேடையில் வந்து, ஜீவாவை மணந்து கொள்ள முடியாது என்று சொல்லித் தன் தாய்மாமனைக் கைப்பிடிக்கிறாள்.

இப்படி இரண்டு தனித் தனிக் கதைகள்.



நிச்சயம் செய்ய வரும் மாப்பிள்ளை தொடர் வண்டி நிலையத்தில் நடக்கும் பாட்டு வாத்தியார் கொலையையும், அதனால் மணப்பெண்ணாக வேண்டிய பெண் விதவைக் கோலம் பூணுவதையும் பார்த்துவிட்டு அவள் குடியிருக்கும் வீட்டுக்கே குடிவந்து அவள் மனதை மாற்ற முயல்கிறான். பிறகு தன்னைக் காதலிக்கும் பெண்ணையே கட்டாயமாகக் கல்யாணம் செய்து கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம். மணமேடைவரை வந்து அத்திருமணம் நின்று போக தனியாக நிற்கும் அவனிடம் விதவைக் கோலம் கொண்ட பெண் சேர்கிறாள். இரண்டு கதைகளை இவ்வாறு ஒன்றாக்கி விட்டார்கள்.

ஆனாலும் தனித்தனியாகச் சொல்ல முடிகிற இரண்டு கதைகளை இணைத்து ஒரே படமாக்கியுள்ளதால் பின்பாதி ரொம்பவும் இழுத்துக் கொண்டே போவது போலத் தோன்றுகிறது.

ஜீவாவாக அஜீத்குமாரும், பாட்டுவாத்தியாராக கார்த்திக்கும் இளம் விதவையாக மீனாவும், பணக்காரப் பெண்ணாக மாளவிகாவும் நடித்துள்ளனர்.

இறந்துபோன கார்த்திக் மீனாவின் கணவன் என்று இல்லாமல் வாத்தி யாரும் மாணவியும் என்று காட்டியிருப்பதுதான் புதுமை.

கள்ளங்கபடமில்லாத அன்பைக் கள்ளக்காதல் என்று ஊரார் பேசுவதை நம்பி, கண்முன்னாலேயே கார்த்திக் குத்திக் கொலை செய்யப்படுவதைக் கண்டு வெகுண்டெழும் போதும், தனியே குழந்தையோடு வசிக்கும் போது காட்டும் பொறுமையின் போதும் கடைசியாக அஜீத்தோடு இணையும் நேரத்தில் நெஞ்சுருகி நிற்கின்ற போதும் மீனர் நடிப்பில் மிளிர்கிறார்.

கார்த்திக்கும், அஜீத்தும் தங்கள் பங்கைச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள். புதுமுகம் மாளவிகா அஜீத்தைத் துரத்தித் துரத்தி நன்றாகவே காதலிக்கிறார்.

பாடல்கள் வைரமுத்து, இசை தேவா இரண்டும் கேட்கும்படி இருக்கின்றன.

வெளியாகும் ஏராளமான படங்களில் இதுவும் ஒன்று.

- இளவரசன்

Regulated By

PIA

Personal • Investment • Authority

# P.SRINIVASAN

INDEPENDENT FINANCIAL ADVISER

## INDEPENDENT INSURANCE INTERMEDIARIES

*REGULATED BY THE PERSONAL INVESTMENT AUTHORITY FOR INVESTMENT BUSINESS ONLY*

*32 Abbots Lane, Kenley, Surrey, CR8 5JH, United Kingdom*

**Fax: 0181 763 2220**
**Tel: 0181 763 2221**
**Personal: 0181 763 1222**
**Mobile: 0958 42 42 22**

We have launched a Web Site on the Worldwide web for the benefit of our clients in the U.K and Worldwide, who are interested in

Pension
Savings
Life Assurance
Mortgages*
Property Lettings (ARM Estates)*
General insurance (ARM Associates)*

*(Not regulated by Personal Investment Authority)

Please pay us a visit

**http://www.srinivasan.co.uk**
**http://www.armassociates.co.uk**

or contact us on E-mail

**For Life Assurance**

**Srini@srinivasan.co.uk**

For Home & General Insurance

**ARM@armassociates.co.uk**

# கனடாவில் 24 மணி நேர 'தமிழ்ஒலி'
# அமெரிக்காவில் 24 மணி நேர 'தமிழ் ஒளி'

புலம்பெயர்ந்து வாழும் மண்ணில் ஈழத் தமிழர் சாதனை செய்து கொண்டிருக்கிறன்றனர்.

ஐரோப்பாவின் முதலாவது 24 மணி நேர தமிழ் வானொலி- தமிழ் தொலைக் காட்சியான TRT நிறுவனத்தின் 'தமிழ் ஒலி' -தமிழ் ஒளி' தொலைக் காட்சி கனடாவிலும்- அமெரிக்காவிலும் வரும் ஆகஸ்ட் மாதம் 25ம் திகதியில் இருந்து செயல் படவுள்ளது.

'குட்டித் தமிழீழம்' என்று வர்ணிக் கப்படும் கனடாவின் ரொறொன் ரோவில் சுமார் 140ஆயிரம் ஈழத் தமிழர்கள் வாழ்கின்றனர்.

இங்குள்ள மக்கள் முன்னர் இளைய பாரதியின் கனடா தமிழ் கூட்டுத் தானத்தின் 24 மணி நேர தமிழ் வானொலி ஊடாக TRT 'தமிழ் ஒலி'யின் சில நிகழ்ச்சிகளை கேட்டு மிகவும் மகிழ்ந்து வந்தனர். இப் போது அந் நிகழ்ச்சிகள் நிறுத்தப் பட்டுவிட்டதால் அவர்களுடைய ஆவலைப் பூர்த்தி செய்ய ஒரு வானொலி தேவை என்பதைக் கருத்திற்கொண்டு வவவ யின் இயக்குர்நாயகம் எஸ்.எஸ். குகநாதன் அங்கு 24 மணி நேர 'தமிழ்ஒலி' வானொலியை இயங்கச் செய்வதற்கான ஏற்பாடுகளைத் துரித மாகக்கினார்.

அதே நேரத்தில் இங்கு மக்கள் பார்த்து மகிழும் 'தமிழ் ஒளி' தமிழ் தொலைக்காட்சியும் அமெரிக்காவில் ஒளிபரப்புவதற்கான ஏற்பாடுகள் முடிவுற்று ஆகஸ்ட் மாத முற்பகுதியில் குகநாதன் அமெரிக்கா சென்று ஒளிபரப்பு நிறுவனம் ஒன்றுடன் கைச்சாத்திட உள்ளார். இங்கு ஒளிபரப்புச் செய்யப்படும் நிகழ்ச்சிகள் இதே போன்று ஆரம்பத்தில் 16 மணி நேரம் அமெரிக்காவில் ஒளிபரப் பாகும். அமெரிக்காவில் இப்போது ஆரம்பமாகும் 'தமிழ் ஒளி' தொலைக்காட்சி கனடாவிலும் ஒளிபரப்பாக வேண்டும் என்ற பல்லாயிரக் கணக் கான கனடா வாழ் தமிழ் மக்களின் எண்ணம் விரைவில் நிறைவேற நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கனடாவில் 24 மணி நேர 'தமிழ் ஒலி' ஒலிபரப்பை உத்தியோக பூர்வமாகஆகஸ்ட் 25ம் திகதியளவில் ஆரம்பித்து வைப்பதற்கு குகநாதனுடன்- முக்கிய TRT இயக்குர் இருவரும் கனடா செல்லவுள்ளனர்.

தினம் 6மணி நேரம் கனடாவில் இருந்து நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகும். ஏனைய நிகழ்ச்சிகள் பிரான்ஸில் இருந்து ஒலிபரப்பாகும்.

கனடாவில் முன்னணி ஒலிபரப் பாளர்களாவுள்ள சிலர் புதிதாக இணைந்து கொண்டு- கனடாவில் தமிழ் ஒலியை வளர்ப்பதற்கு முன்வந்துள்ளனர்.

கனடா 'ஈழநாடு' பதிப்பின் ஆசிரியராகவுள்ள பரமேஸ்வரன் இந்த வானொலியின் பொறுப்பாளராக இருந்து செயல்படுவார். -தமிழன்

**TRT கலைஞர்கள்**

தமிழ் ஒலி- தமிழ் ஒளி கலைஞர்கள் பற்றிய அறிமுகங்கள் அடுத்த இதழில் இடம்பெறும்.

AIR CONDITIONING SPECIALISTS
K.S BUILDING SERVICES ENGINEERING LTD
* AIR CONDITIONING SYSTEMS
* VENTILATION
* ELECTRICAL INSTALLATIONS
* AIR CONDITIONING PORTABLE UNITS FOR HIRE
FULLY QUALIFIED ENGINEERS
FOR A PROFESSIONAL SERVICE CALL
0181 200 8962
MOBILE: 0956 508 176
25,POOLSFORD ROAD, COLINDALE, LONDON NW9 6HP

கீழ்கரவைப்
பொன்னையனின்

# தீ..மழை



கீழ்கரவைப்பொன்னையனின் 'தீ..மழை' படத்தில் பொன்னையன் நடிப்பிலும் சக்கை போடுகிறார்

கீழ்கரவைப் பொன்னையனால் சும்மா இருக்க முடியாது. எழுதிக் குவிப்பார். மேடையில் பேசித்தள்ளுவார். எதையும் கச்சிதமாகச் செய்து முடிப்பார்.
எதைச் செய்தாலும் மக்கள் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுப்பார்.
இப்போது அவரிடம் சினிமா சிக்கி இருக்கிறது.
பாரிஸுக்கு அவர் வந்த பின்னர் பொன் கலைக் கூடம்என்ற அமைப்பை உருவாக்கி- 'சத்திய கீதை' என்ற படத்தை எடுத்தார். இதன் பின் 'புயல்' வந்தது. இப்போது-
தீ..மழையை கொண்டு வந்து இருக்கிறார்.
இவரும் ஒரு ஈழத்து டி. ராஜேந்தர்தான். கதை- வசனம்- ஒளி- ஒலிப்பதிவு இயக்கம்- காட்சித் தொகுப்பு- நெறியாள்கையுடன்- நடிப்பும் கீழ்கரவைப் பொன்னையன்தான்.
ஒரு அகதிக் குடும்பம் வெளி நாட்டுக்கு வரும்போது ஏற்பட்ட நிகழ்வுகள். வெளிநாட்டில் அக் குடும்பம் சந்திக்கும் பிரச்னைகள். பல கரடு முரடான சந்திக்கக் கூடாத பிரச்னைகளைச் சந்தித்து முன்னேற முனையும் போது அவர்களுக்கு ஏற்பட்ட தடைகள். தங்களது பிள்ளைகளை வளர்க்கும்போது அவர்களது பிரச்னை. பிள்ளைகளுடைய பழக்க வழக்கங்கள்- அதனால் மனம் வருந்தும் பெற்றார்- இவைகளை மையப்படுத்தி பின்னிப்பிணைந்திருக்கிறார் கீழ்கரவைப் பொன்னையன்.
சுவிஸிலும்- பாரிஸிலும் திரையிடப்பட்ட இப்படத்துக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. ஐரோப்பாவின் ஏனைய நாடுகளிலும் இப்படம் திரையிடப்பட்டு புலம் பெயர்ந்த மக்களின் எண்ணங்களுக்கு விருந்தாக வேண்டும் என்பதே பொன்னையனின் விருப்பம்.
''1963 ஆம் ஆண்டில் இருந்து நாடகத் துறையில் ஈடுபட்டேன். ஆரம்ப கலை வாழ்க்கை நாடகமே. கரவை வள்ளுவர் மன்றம் எனது கலைத் தாய் வீடு. அமரர் கரவை அருளானந்தம் எனது கலை வாழ்க்கையின் குரு. அவருக்கே தீ.. மழை சமர்ப்பணம்'' என்று தன் இதயத்தினை என்னோடு பகிர்ந்து கொண்ட பொன்னையன்- புலம் பெயர்ந்த மண்ணில் தன் எழுத்துப் பணிக்கு களம் அமைத்துக் கொடுத்த 'ஈழநாடு' எஸ். எஸ். குகநாதனை மறக்காமல் மனதில் வைத்திருக்கிறார்.
பொன்னையன் சிறுகதைகள் 100க்கு மேல் எழுதியுள்ளார். விமர்சனம் நிறைய எழுதியிருக்கிறார். நிறைய நாடகங்கள் நடித்திருக்கிறார்.
தீ..மழைக்கு முதல் இரு விதவைகள் பற்றிய அவரது 'மனச்சிறை' படம் வந்திருக்க வேண்டும். விரைவில் அவரது அந்தப் படம் திரைக்கு வந்து புரட்சி செய்யும்.
முத்தமிழின் சுவைக்கு மறுபெயர் பொன்னையன். தமிழுக்குக் கிடைத்த உண்மையான தொண்டன் அவர்.

-தமிழன்





வாசித்து
விட்டீர்களா?
கல்லாறு சதீஷின்
வித்தியாசமான
சிறுகதைத் தொகுப்பு நூல்

''4 நாட்கள் பாடசாலைச்
சுற்றுலாவிற்கு உங்களுடைய
மகளும் வருவதானால் -பதினான்கு
வயதான அப் பிள்ளையின்
எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு
கருத்தடை மாத்திரைகளைக்
கொடுத்தனுப்பவும்''
-கடிதத்தை வாசித்தப் பார்த்த
தாய்க்கு வியர்த்து விறுவிறுத்தது.
கதையின் முடிவு என்ன?
கலாசார அதிர்ச்சி- எதிர்காலத்தில்
குழந்தைகள் தமிழ் பேசுவார்களா?
சமுதாயச் சிந்தனை கொண்ட நூல்-
நூலைப் பெற்றுக் கொள்ள-
Arulrasa Nageswaran,
Schonmat Str- 08,
6034 -Inwil, Switzeland
Phone: 041 4480227



ஈழகேசரி
EELAKESARI

Editor:
E.K. Rajagopal

Published by:
EELAKESARI
38, Moffat Road,
London SW17 7EZ
Phone: 0181 767 8004
Fax: 0181 767 7866

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட 26 பேருக்கும் தூக்கு தண்டனை விதித்து தடா நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. 1998 ஜனவரி 28ஆம் நாள் அத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

தமிழினம் கொதித்தெழுந்தது. மனித நேயர்கள் மனம் பதைத்தனர். பொதுமக்கள் இது என்ன கொடுமை? என வாய்பொத்தி நின்றார்கள். ஆனால் தமிழர்களைக் உணர்வு மீண்டும் தலையெடுக்கத் துவங்கியது. அரசாங்கம் மிரட்டிப் பார்த்தது. தமிழின உணர்வாளர்களைத் தேடித் தேடி மிரட்டியது. மிரளவில்லை தமிழர்கள். தமிழர்களை மிரட்ட நீதிபதி நவநீதத்தைப் பயன்படுத்தியது.

இனிமேல் இத்தகைய அமைப்புகளோடு (தமிழின உணர்வு அமைப்புகள்) தொடர்பு வைத்துக்கொள்ளவே எவரும் அஞ்சவேண்டும் என்று தன் தீர்ப்பில் சொன்னார்

# நால்வரையும் மீட்கும் நாள் வரும்

**தமிழ்க்கொடி**

காக்கவே பிறப்பெடுத்துள்ள தமிழினத் தலைவர்கள் வாயையே திறக்கவில்லை. மூத்த தமிழினத் தலைவரும் தமிழக முதலமைச்சருமான மு.கருணாநிதி 26 பேரில் தி.மு.க.வினர் ஒருவரும் இல்லை என அறிக்கை விடுத்தார்.




தமிழினத் தலைவர், தமிழினத் தளபதி, தமிழினப் போராளி, தமிழர் தலைவர் என்று எத்தனை பேர் இருந்தென்ன? 26 பேரின் இன்னல் துடைக்க ஒருவரேனும் வந்தாரா? இல்லை. வெகுமக்கள் செல்வாக்கு இல்லை. பெரும் பொருள் கொண்ட செல்வந்தர் இல்லை. அரியணைகளுக்கு அடிபணியும் அசிங்கம் இல்லை. இவை எதுவும் இல்லையென்றால் ஒருவன் தலைவனே இல்லை என்பது தமிழகத்தின் தலையெழுத்து. அந்தத் தலையெழுத்தை மாற்றிக் காட்டினார் ஒரு தமிழினத் தலைமகன். அவர்தான் அய்யா பழ.நெடுமாறன்.

ராஜீவ் கொலை நிகழ்வுக்குப் பின்னால் விடுதலைப் புலிகள், தமிழீழம் என்று யாரும் பேசவே அஞ்சி நின்ற வேளையிலே சிறுசிறு அமைப்புகளையெல்லாம் ஒன்று திரட்டி, தமிழீழ ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவைத் துவக்கி அதன் மூலம் பல்வேறு தமிழீழ ஆதரவுப் போராட்டங்களையும், பொதுக்கூட்டங்களையும், கருத்தரங்குகளையும் நடத்திவந்தார். அதன் விளைவாகத் தமிழகத்தின் மௌனம் கொஞ்சம் கொஞ்சமாகக் கலையத் துவங்கியது.

அச்சத்தால் அடங்கிப் போயிருந்த தமிழீழ ஆதரவு நவநீதம். ஆக வழங்கப்பட்ட தீர்ப்பு ராஜீவ் கொலைக்கானது அன்று என்று அவர் தெளிவுபடுத்தினார். இப்போது தமிழ் மக்கள் அஞ்சவில்லை. தமிழினத் தலைவர்கள் அஞ்சினார்கள். இந்தச் சூழ்நிலையிலேதான் 6.2.98 அன்று 26 தமிழர் உயிர்க்காப்பு வழக்கு நிதிக்குழு அமைக்கப்பட்டது.

குழுவின் தலைவராக நெடுமாறன் அய்யா அவர்களும், செயலாளர்களாக பெ.மணியரசன், தியாகு, கல்யாணி ஆகியோரும், பொருளாளராக பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். குழு அமைக்கப் போகிறோம் என்ற தகவலைச் சொன்னவுடன் என்னையும் அதில் சேர்த்துக் கொள்ளுங்கள் என ஆர்வத்துடன் கேட்டுக்கொண்ட இந்தியாவின் தற்போதைய பாதுகாப்பு அமைச்சர் ஜார்ஜ்பெர்னாண்டஸ் குழுவின் புரவலரானார். சில மாதங்களில் அவர் இந்தியப் பாதுகாப்பு அமைச்சரானதும் அதிலிருந்து விலகிக் கொண்டார்.

குழுவிடம் தமிழ் மக்கள் வாரி வழங்கினார்கள். பணமாக மட்டுமின்றி தங்க வளையல்களாகவும், தங்கத் தாலிகளாகவும் மோதிரங்களாகவும் குவிந்தன. தமிழின உணர்வாளர்களின் இந்த விசுவ ரூபத்தைக் கண்டு அஞ்சியது எதிரிகள் கூட்டம். எந்தப் பெரிய கட்சியும் இல்லாமல் எந்தப் பெரிய தலைவரும் இல்லாமல் அரசின் மிரட்டல்களையும் பொருட்படுத்தாமல் மக்கள் கூட்டம் உயிர்காப்பு நிதிக்குழுவுக்கு அளித்த ஆதரவை

# M.K.SRI & CO

## SOLICITORS

ADMINISTRATORS OF OATHS

## LEGAL AID WORK UNDERTAKEN

**We specialise in**

* IMMIGRATION
* CRIME
* CONVEYANCING
* MATRIMONIAL
* STATE BENEFITS
* TRAFIC OFFENCES
* ADVICE & ASSISTANCE
* AT POLICE STATION

**Fairholme Road,**
**Off Station Road, Harrow,**
**Middx HA1 2TN.**

**Tel: 0181 515 7000** (4lines)
**Fax: 0181 933 1361**

**CONTACT: M. K. SRITHARAN**


எதிரிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

குய்யோ முறையோ எனக் கூச்சலிட்டார்கள். தினமலர், துக்ளக், இந்து, இந்தியாடுடே, குமுதம், கல்கி, ஜூனியர் விகடன் போன்ற பார்ப்பனப் பத்திரிகைகள் நஞ்சைக் கக்கின.

இத்தனை ஆர்ப்பாட்ட ஆரவாரங்களுக்கிடையேயும் அமைதியாகத் திரண்டது நிதி.

காங்கிரஸ் கட்சியின் ஒரு அறக்கட்டளைக்குச் சொந்தமானது சென்னை காமராசர் அரங்கம். இந்த அரங்கத்தைத் திறந்து வைத்தவர் ராஜீவ்காந்தி. அந்த அரங்கத்திலேயே 9.5.98 அன்று நடந்த 'நந்தன்' ஏட்டின் ஆண்டுவிழாவின் போது திரண்ட நிதி ஏறத்தாழ ரூ. 40,000/-

இப்படி சாதாரண கூலி வேலை செய்யும் மக்கள் பணத்தில் வழக்குச் செலவுகள் ஈடுகட்டப்பட்டன. பல்வேறு வழக்குகளில் இந்திய அரசுக்கு ஆதரவாகவும், சிபிஐக்கு ஆதரவாகவும் வாதாடியுள்ள இந்தியாவின் மூத்த வழக்குரைஞர்களில் ஒருவரான என்.நடராசன் மனமுவந்து உணர்வுப் பூர்வமாக இந்த வழக்கை நடத்த ஒப்புக்கொண்டார். சென்னையில் வழக்காடிய வழக்குரைஞர்கள் சந்திரசேகரன், கோபிகிருஷ்ணா, ராமதாஸ், துரைசாமி, இளங்கோ ஆகியோர் அவருக்கு உதவியாக புதுதில்லியில் இருந்தனர்.



1999 மே 11, உச்சநீதிமன்றம் தீர்ப்பை வழங்கியது. 26 பேரில் 19 பேர் விடுதலை செய்யப்பட்டனர். மூவருக்கு ஆயுள் தண்டனை. நால்வருக்கு மரணதண்டனை உறுதி செய்யப்பட்டது. 22 உயிர்கள் காப்பாற்றப்பட்டன. 4 உயிர்கள் இன்னமும் தூக்குமர நிழலில் என்றாலும் இது தமிழினத்துக்குக் கிடைத்த வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி என்றே சொல்லப்படுகிறது. கண்மூடித்தனமாக வழங்கப்பட்ட ஒரு அராஜகத் தீர்ப்பை எதிர்த்து எளிய கரங்கள் ஒருங்கிணைந்து செயலாற்றியதே மிகப் பெரிய செய்தி.

## வழக்கு நிதிக்குழு

| | |
|---|---|
| தலைவர் | பழ.நெடுமாறன், |
| துணைத் தலைவர்கள் | கரூர் பி.ஆர்.குப்புசாமி, கார்முகில், ச.மெல்கியோர், ப.சண்முகசுந்தரம், ஆனூர் ஜெகதீசன், நெல்லிக்குப்பம் வி.கிருஷ்ணமூர்த்தி, நாத்திகம் இராமசாமி, புதுவை அழகிரி, நாமக்கல் என்.பி.இராமசாமி |
| செயலாளர்கள் | பெ.மணியரசன், தியாகு, பேரா. ப.கல்யாணி, |
| பொருளாளர் | முனைவர் சுப.வீரபாண்டியன் |

முருகன், சாந்தன், நளினி, பேரறிவாளன் ஆகிய தூக்கு தண்டனை உறுதி செய்யப்பட்ட நால்வருக்குமான தண்டனையை ரத்துசெய்யக் கோரி மறு ஆய்வு மனு தாக்கல் செய்யப்படும் என்று வழக்கறிஞர் என்.நடராசன் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கு முழுமையும் 'தடா' என்னும் கொடிய சட்டத்தின் கீழ் நடந்தது. அதன்படியேதான் தண்டனையும் வழங்கப்பட்டது. தற்போதைய உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு, இந்த வழக்கு 'தடா' சட்டத்துக்குப் பொருந்தாது. இது ராஜீவ் காந்தி என்னும் தனிமனிதருக்கு எதிரான சதியே தவிர இந்திய அரசுக்கோ, மக்களுக்கோ எதிரான சதி அல்ல. எனவே இது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் அடங்காது எனக் கூறுகிறது.

தீர்ப்பு இப்படிச் சொல்லியுள்ளதால் தூக்குத் தண்டனை உறுதி செய்யப்பட்ட நால்வரையும் மீட்டுவிட முடியும் எனும் நம்பிக்கை பிறக்கிறது. ஏனெனில் அவர்களுக்கு உறுதி செய்யப்பட்ட தூக்குத் தண்டனை, அவர்களிடம் 'தடா' சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் தாம். தடாவே இவ்வழக்குக்குப் பொருந்தாது என்னும் போது அதனடிப்படையில் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் மட்டும் எப்படிப் பொருந்தும் எனும்

உங்கள் மனங்களில் இடங்கொண்ட
குமார் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் புதிய நிறுவனம்

DYANAA TELECOM SERVICES SA
197 Rue de Faubourg St. Denis
75010 PARIS.
M°: Gare du Nord or La Chapelle

குமார்ஸ்

KUMARS SHOP
80 Bd. Barbès, 75018, PARIS.
M°: Marcadet Poissoniers
Tel: 01 42 59 35 10
Fax: 01 42 59 35 00

KTC JEWELS
193 Rue de Faubourg St. Denis
75010 PARIS.
M°: Gare du Nord /
La Chapelle

SINGAPORE EXCHANGE CO.
38 Rue St. Quentin, 75010 PARIS.
M°: Gare du Nord

KUMARS

கேள்வி எழுந்துள்ளது. இந்த முரண் பாட்டைச் சுட்டிக்காட்டி அந்நால்வரையும் மீட்டுவிடலாம் என்கின்றனர்.

1983ஆம் ஆண்டு ஈழத்தில் நடந்த தமிழினப் படுகொலைகளைக் கண்டித்தும் அதை அடக்கவும் ஒட்டுமொத்தத் தமிழின மும் திரண்டு எழுந்தது முதல் இந்திய அரசுக்கும் உளவுத்துறைக்கும் தமிழினத் தின் மீது ஒரு அச்சம். இந்த எழுச்சி தனித் தமிழ்நாடு என்பது வரை போய் நிற்கும் என்னும் எண்ணம். இதைத் தடுத்து நிறுத்த பல்வேறு வகைகளில் முயன்றன உளவுத் துறைகள். ஆனாலும் முடியவில்லை. தமிழ் மக்களின் தமிழீழ ஆதரவு முழக்கம் ஓய்ந்துவிடவில்லை. அதற்கான உதவி களும் நின்று விடவில்லை.

ராஜீவ் கொலை நடந்தது. விழித்துக் கொண்ட உளவுத்துறை அதனைப் பயன் படுத்தி தமிழ் மக்களை மிரட்டி ஒடுக்கியது. தமிழின உணர்வாளர்களின், இயக்கங் களின் தொடர் முயற்சியால் அந்த அச்ச உணர்வு கொஞ்சம் கொஞ்சமாக அகற்றப் பட்ட நேரத்தில் 26 பேருக்கும் தூக்கு என்று சொல்லி மிரட்டியது. இப்போது அதையும் தாண்டி உச்சநீதிமன்றம் சென்று வெற்றி பெற்றுவிட்டதால் உளவுத் துறைகள் ஆடிப் போயிருக்கின்றன.



சென்னை சிறை வாயிலில்...

9.5.98 அன்று சென்னை காமராசர் அரங்கத்தில் நடந்த நந்தன் ஏட்டின் ஆண்டுவிழாவின்போது நெடுமாறன் அய்யா அவர்களும் 'நந்தன் ஆசிரியர்' அருணாசலம் அய்யா அவர்களும் பேராசிரியர் சுபவீ அவர்களும் துண்டேந்தி வசூல் செய்தார்கள்.

அவ்விழாவில் வெளியிடப்பட்ட அருணாசலம் அவர்களின் நெஞ்சின் அலைகள் நூல் விற்பனைத் தொகையையும் தமிழர் நிதிக்காக அளித்தார். இரண்டும் சேர்ந்து ஏறத்தாழ ரூ. 40,000/-


பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் மகள் தேன்மொழி அவர்கள் தன்னுடைய தாலியை தமிழர் நிதிக்காகக் கொடுத்தார்.

பூங்குளம் வேலரசின் துணைவியார் நந்தினி அவர்களும் தன்னுடைய தாலியைக் கொடுத்தார்.

நெய்வேலியில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் 5 வயதுக் குழந்தை ஆதிரை, சிறையிலிருக்கும் ஆதிரையை மீட்க என்று சொல்லி தன் பிஞ்சுக் கையிலிருந்த தங்க வளையலைக் கழற்றிக் கொடுத்தது.

முகம் தெரியாத நபர் ஒருவர் தனது தங்க மோதிரத்தை நிதிக்காகக் கொடுத்தார்.

'இன்தாம்' சௌரிராசன் அவர்களின் துணைவியார் மணிமேகலை அவர்கள் தன்னுடைய தங்க வளையலைக் கொடுத்தார்.




மூத்த வழக்குரைஞர் என்.நடராசன்

இந்தத் தீர்ப்பு, தான்தோன்றித்தனமாக வழக்குகளைப் போட்டு நாம் வெற்றி பெற்றுவிட முடியாது என்ற எச்சரிக்கை யை உளவுத்துறைகளுக்கும், தமிழீழ விடுதலைப் போராட்டம் நியாயமானது நேர்மையானது அதை ஆதரிப்பதில் எந்தத் தவறும் இல்லை என்னும் தெளிவை மக்களுக்கும் உண்டாக்கியுள்ளது.

மக்களைப் பயமுறுத்தப்போய் தானே அரண்டு நிற்கிறது உளவுத்துறை.

இதுவே தமிழினத்திற்குக் கிடைத்த வெற்றி.

# விஜய் படத்தை இயக்க



★ பாக்யராஜுக்கும், பாண்டியராஜனுக்கும் பட வாய்ப்புகள் இல்லை. வீட்டில் உட்காரவும் போரடிக்கிறது. எனவே குருவும், சிஷ்யரும் சேர்ந்து பில்லியர்ட்ஸ் விளையாட கிளம்பி விடுகின்றனர். மாலையில் போனால், விடிய விடிய விளையாட்டுதான்! பொழுது போனால் சரி!

★ கால்ஷீட் சொதப்புவதில் சிம்ரன் கை தேர்ந்தவர். எனவே அவரை வைத்து படம் எடுத்தவர்கள் மறுபடி அவர் பக்கம் போகத் தயங்குகின்றனர். லேட்டஸ்டாக 'வாலி' பட தயாரிப்பாளரும் சிம்ரனுக்கு பெரும் கும்பிடு போட்டிருக்கிறார்.

★ மீனா அடிக்கடி வெளிநாடு சென்று வருகிறார். அவரது பயணமும் மர்மமாக இருக்கிறது. மீனா அடிக்கடி வெளிநாடு செல்வதை வைத்துப் பார்த்தால் அவர் வெளிநாட்டில் ஏதோ தொழில் தொடங்கி இருக்கிறார் என்றே நினைக்கிறேன் என்கிறார் ஒரு மூன்றெழுத்து நடிகை! என்ன தொழிலோ?

★ கள்ளழகர் படத்தை எடுத்ததினால் கடனாளியாகி, காணாமல் போன தயாரிப்பாளர் ஹென்றி, மீண்டு(ம்) வந்திருக்கிறார். எழுபது லட்சம் கடனை அடைக்கும் முயற்சியாக 'ஜூலியட்' என்ற படத்தைத் தயாரிக்கிறார். இந்தப் படத்தை அவரே இயக்கப் போகிறாராம்.

★ வாலி படத்தை இயக்கிய சூர்யாவை வளைத்துப் போட பல தயாரிப்பாளர்கள் முயன்றனர். முடிவில் வென்றவர் ஏ.எம்.ரத்னம் தான். யெஸ். 'காதலர் தினம்' படத்தை அடுத்து ரத்னம் தயாரிக்கும் படத்தை சூர்யா இயக்குகிறார்.


★ இஷா கோபிகர் நடித்த என் சுவாசக் காற்றே, காதல் கவிதை படங்கள் இரண்டும் படு தோல்வி! அதனால் இஷாவை ராசி இல்லாத நடிகை என்று தூற்ற ஆரம்பித்திருக்கிறது திரையுலகம். இஷா இப்போது நடித்து வரும் 'நெஞ்சினிலே' ஓடினால்தான் பிழைப்பார். இல்லை என்றால்... அம்பேல்!

★ பாசில் இயக்கத்தில் விஜய் மீண்டும் ஒரு படத்தில் நடிக்கவிருந்தார். படப்பிடிப்புக்குப் புறப்பட தயார் நிலையில் இருந்த போது, கதையில் மாற்றம் செய்யும் படி சொன்னார் விஜய். பார்த்தார் பாசில். அந்தப் படத்தை ட்ராப் செய்துவிட்டு கேரளாவுக்கே கிளம்பிவிட்டார். சுயமரியாதை!

★ உயிரே படத்தை எடுத்து கையை சுட்டுக் கொண்ட மணிரத்னம் அடுத்து, 'அலைபாயுதே' என்ற காதல் படத்தை எடுத்து வருகிறார். மாதவன் என்ற பம்பாய் தமிழர் கதாநாயகனாகவும், ஷாலினி கதாநாயகியாகவும் நடிக்கும் இந்தப் படத்தில் பாடல்களே இல்லை!

★ சூர்யவம்சம் படம் இந்தியில் தயாராகி இருக்கிறது. 'சூர்யவன்சம்' என்ற பெயரில் வெளிவரவிருக்கும் இதில் அமிதாப்பச்சன் அப்பா, மகன் என இரண்டு வேடத்தில் நடிக்கிறார். நாயகி சௌந்தர்யா!

★ நகைச்சுவை நடிப்பில் இப்போது நம்பர் ஒன்னாக இருக்கும் விவேக், ஒரு டஜன் படங்களில் நடித்து வருகிறார். ஒவ்வொன்றிலும் வித்தியாசமான



# மறுந்த இயக்குநர்


வேடமாம். குறிப்பாக மணிரத்னம் இயக்கும் அலைபாயுதே படத்தில் சீரியஸான வேடமாம். நகைச்சுவை வசனம் ஒன்றுகூட இல்லையாம்.

★ தேவாவின் மகள் சங்கீதாவை காதலித்து மணந்த, இளையராஜாவின் அண்ணன் மகன் பார்த்திபாஸ்கர் ஒரு படத்தை இயக்குகிறார். கார்த்திக், சிம்ரன் நடிக்கும் இந்த படத்தை தரம்சந்த் லுங்கட் தயாரிக்கிறார்.

★ குடும்பக் கதைகள் எல்லாம் தொலைக் காட்சியில் தொடராக வர ஆரம்பித்து விட்டன. அதனால் இனி குடும்பக் கதையை படமாக எடுத்தால் ஓடாது என்ற கருத்து திரையுலகில் ஏற்பட்டிருக்கிறது. இதன் விளைவு... இனி 'வாலி' போன்ற படங்களே வரும்!?

★ பூவெல்லாம் கேட்டுப் பார் படத்தின் பாடல் காட்சியை அந்தமானில் படமாக்க திட்டமிட்டிருந்தார் இயக்குநர் வஸந்த். தயாரிப்பாளர் பஞ்சு அருணாசலத்திடம் பணம் இல்லை. எனவே அந்தமான் திட்டத்தைக் கிடப்பில் போட்டுவிட்டு சென்னையிலேயே சுருட்டி விட்டனர்.

★ ஊர் பெயரை படத்திற்கு தலைப்பாக வைப்பது இப்போது ஃபேஷனாகி



வருகிறது. ஏற்கனவே பம்பாய், கல்கத்தா என்ற பெயர்களில் படங்கள் வந்திருக்கின்றன. இப்போது ஊட்டி, திருநெல்வேலி, வேடந்தாங்கல் என்ற பெயர்களில் படங்கள் தயாராகி வருகின்றன. அடுத்து கூடுவாஞ்சேரி என்று படம் வருமோ?

★ மோனிஷா என் மோனலிஸா படத்தில் கதாநாயகியாக அறிமுகமான மும்தாஜின் நிஜப் பெயர்... நக்மா! ஏற்கனவே ஒரு நக்மா இருப்பதால் குழப்பம் வரக் கூடாது என்று டி.ராஜேந்தர்தான் மும்தாஜ் என்று பெயர் சூட்டினாராம். நல்லவேளை! ஒன்பது எழுத்தில் பெயர் வைக்காமல் விட்டாரே?

★ சூப்பர் குட் பிலிம்ஸ் சௌத்ரிக்கு வருடத்திற்கு ஒரு படம் நடித்துக் கொடுப்பது என்று முடிவு செய்திருக்கும் சரத்குமார், இந்த வருடம் ஒரு படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டிருக்கிறார். இதை கோவி. பாண்டியன் இயக்குகிறார். இவர் ஏற்கனவே மாணிக்கம் என்ற படத்தை இயக்கியவர்.

★ மு.களஞ்சியம் இப்போது இயக்கி வரும் 'கேசவன்' படம் பரபரப்பான ஒரு அரசியல் படமாம். இளம் வக்கீலாக நடிக்கும் சரத்குமார் அரசியல் கட்சிகளை வாங்கு வாங்கு என்று வாங்குகிறாராம். தி.மு.க. கூடாரத்திற்கு இவ்விஷயம் தெரியுமோ?

★ ஆறுவது சினம், அடிமைகள், மலபார் போலீஸ் படங்களில் நடித்து வரும் சத்யராஜ், அடுத்து கஸ்தூரிராஜாவின் படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டிருக்கிறார். கரகாட்டம் ஆடி



விட்டிருவாரே கஸ்தூரி ராஜா?

★ பிரபுவின் திரையுலக வாழ்க்கை ஸ்தம்பித்து நிற்கிறது. இனி அவரை வைத்து யாரும் படம் எடுப்பதே சந்தேகம் தான். பிரபு நடித்த 'கும்மிப்பாட்டு' தோல்வி! 'மனம் விரும்புதே உன்னை' இன்னும் வெளியாகவே இல்லை. பாவம்!

★ படையப்பா படத்தில் சிறப்பாக நடித்தவர் ரம்யா கிருஷ்ணன் ஒருவர்தான். என்ன பிரயோஜனம்? புதுப்படங்கள் ஏதும் அவருக்கு ஒப்பந்தமாகவில்லை. அதனால் மீண்டும் தெலுங்குப் பக்கம் சென்று திரவியம் தேட ஆரம்பித்துவிட்டார்.

★ தமிழ்த் திரையுலகில் புதிய இளம் பாடலாசிரியர்கள் அதிகரிக்கத் துவங்கியுள்ளனர். மு. களஞ்சியம் இயக்கும் கேசவன் படத்தில் யுகபாரதி என்னும் புதிய கவிஞர் ஒரு பாடல் எழுதியுள்ளார். சீமான் இயக்கும் 'வீரநடை', விக்ரமனின் 'வானத்தைப் போல' ஆகிய படங்களில் நா. முத்துக்குமார் என்னும் புதிய கவிஞர் பாடல்கள் எழுதியுள்ளார்.

*- கோடம்பாக்கன்*

# MAY FAIR TRAVELS

லண்டன் தமிழர்களின் அபிமானத்தைப்பெற்ற

ஒரே பயணக் களஞ்சியம்

## JULY- AUGUST DEPARTURES

**Return fares from**

***Colombo £420 *Madras £490**

***Toronto £390**

**PLUS APLLICABLE AIRPORT TAXES**

**Fares are available to other worldwide detinations as well**
**British Airways, Emirates, Air Lanka, Gulf Air,**
**Singapore Airlines, Malaysian Airlines,**
**Lufthansa, KLM, America Airlines**

**Travel Insurance & Visa Services are availble**


**Our office hours are**
**Monday to Friday 9 AM - 7 PM**
**Saturdays 10 AM to 4 PM**

# MAYFAIR TRAVELS

**82, Mitcham Road,**
**London SW17 9NG**
**Tel: 0181 767 7775**
**Fax: 0181 767 9887**

# தீவிரம் குறையாதது தமிழீழப் போர்

**கவிஞர் இன்குலாப்**



தமிழகத்தில் போர்க்குணமிக்க கவிஞர்களில் முன்னணியில் இருப்பவர் கவிஞர் இன்குலாப். எந்தவித சமரசத்திற்கும் இடம் தராத உரத்த சிந்தனையாளர். மாணவப் பருவத்திலிருந்தே தமிழுக்காகவும் தமிழினத்திற்காகவும் போராட்டக் களத்தில் நிற்பவர். தமிழீழப் போராட்டத்திற்கு என்றென்றும் ஆதரவாகக் குரல் கொடுப்பவர். சென்னை புதுக்கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். கவிதைத் தொகுப்புகள் இவரின் பெயரைச் சொல்லும் எனில் இவரின் அவ்வை நாடகம் புகழைச் சொல்லும். இவரிடம் நாம் கண்ட நேர்காணல் இது...

■ **நீங்கள் அரசியலுக்கும் கவிதைக்கும் அறிமுகமான காலகட்டத்தில், சமூகச் சூழல் எப்படி இருந்தது?**

நான் ஒடுக்கப்பட்ட குடும்பத்தைச் சார்ந்தவன். சமூக ஒடுக்குமுறை என்னைக் கோபக்காரனாக மாற்றியது. குடும்பச் சூழலே எனக்கு போராட்டத்தைக் கற்றுக் கொடுத்தது. ஆதிக்கச் சக்திகள் மீது எனக்கு என்றைக்கும் மரியாதை இல்லை. கொள்கைத் தெளிவோடு நான் அரசியலுக்கு வந்தேனா என்றால் கிடையாது என்றுதான் சொல்வேன். இயல்பாக வந்தேன். தெளிவிற்கான கோபம் என்னிடம் ஏற்கனவே இருந்தது.

நான் மதுரை தியாகராசர் கல்லூரியில் பயின்ற காலத்தில்தான் இந்தி எதிர்ப்புப் போர் மிகவும் உக்கிரமாக இருந்தது. 1965ஆம் ஆண்டுவாக்கில் மாணவர்கள் ஆதிக்க மொழிக்கெதிராக திரண்ட காலகட்டம் அது. அந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்களில் நானும் ஒருவன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் பேச்சு வன்மையால் நான் அக்கட்சியின்பால் ஈர்க்கப்பட்டேன். திராவிட நாடு விடுதலை அடைந்தால் சமூக விடுதலை அடைந்துவிடும் என்று நம்பினோம். அந்த நம்பிக்கையில்தான் 67ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் திமுகவிற்கு ஆதரவாகச் செயல்பட்டோம். மிகப்பெரிய சமூக மாற்றத்தை உருவாக்கக்கூடிய சக்தி திமுகவிற்கு இருப்பதாக நம்பினோம். ஆனால் அப்படி ஒன்றும் நடந்துவிடவில்லை. 68 டிசம்பரில் நடந்த வெண்மணி படுகொலை திமுக பற்றிய மாயையைக் கிழித்துவிட்டது.

■ **சமூகக் கொடுமைகளால் கோபம் ஏற்படும்போது உங்களுக்கு கவிதை போதுமானதாக இருக்கிறதா?**

சில சமயங்களில் போதுமானதாக இல்லை; சில சமயங்களில் கூடுதலாக இருக்கிறது. ஒருவனின் கோபம் இலக்கியத்தோடு நின்றுவிடவேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. சமூக மாறுதலுக்காக நடைபெறும் போராட்டத்தில் கலை இலக்கியத்திற்கு குறிப்பிடத்தக்க இடம் இருக்கிறது. ஆனால் அதுவே தீர்வாகி விடாது.

■ **கலை கலைக்காக, மக்களுக்காக என்ற விவாதம் பழையது. அதில் பெரும்பாலானவர்களால் கலை மக்களுக்காக என்ற கருத்தே முன்வைக்கப்பட்டது. எனில், இந்த நாற்பது ஆண்டு காலமாக, குறிப்பாக கவிதை உலகம் இப்பணியைச் சரியாகச் செய்திருக்கின்றதா?**

இந்த அனுபவம் எனக்கு வேறொரு உண்மையை உணர்த்தியிருக்கின்றது. வாழ்க்கையே கலைக்காகத்தான். யோசித்துப் பார்த்தால் மிருகங்களில் இருந்து மனித வாழ்க்கை எந்தவகையில் வேறுபட்டிருக்கிறது என்றால் மனிதனின் கலையனுபவத்தால் பெறுகின்ற மன நிறைவுதான் அவனை வேறுபடுத்திக் காட்டுகிறது என்று கூறலாம்.

கலை—இலக்கிய அனுபவத்தால் பண்பாட்டில் அவனடைகின்ற மேம்பாடுகள் மனிதனை வேறுபடுத்திக்

காட்டுகின்றன. முன்னமே கூறியதுபோல அது ஒன்றே தீர்வாகிவிடாது. அதற்கு ஒரு பங்கிருக்கிறது. அந்த வேலையை கவிதைகள் செய்திருக்கின்றன. மூடப்பழக்க வழக்கங்கள் எதிர்ப்பு, ஆதிக்க மொழி எதிர்ப்பு, தமிழின மீட்சி போன்றவற்றிற்கெல்லாம் பாரதிதாசன் கவிதைகள் ஒரு படைக்கலனாக இருப்பதை நாம் பார்க்கலாம். ஆணாதிக்க எதிர்ப்பு, சாதிய எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு போன்றவற்றிற்கெல்லாம் கவிதைகள் துணை யாக இருந்திருக்கின்றன.

■ தற்போதைய கவிதைகளின் நம்பகத்தன்மை குறித்து உங்களின் விமர்சனம் என்ன?

நம்பகத்தன்மை என்று எதைச் சொல்கிறீர்.

■ எழுத்துக்கும் வாழ்க்கைக்குமான இடைவெளி பற்றி?

அது எல்லாக் காலங்களிலும் இருந்திருக்கிறது. ஏடேறிய காலம் தொட்டே இக்கேள்வி இருந்திருக் கிறது. இப்போது ஒருவன் கவிதை படைப்பது போல வாழமுடியாமல் போகலாம். ஆனால் அதற்கான விருப்பம் இருக்கிறது; தேடல் இருக்கிறது; போராட்டம் புதைந்து கிடக்கிறது என்று நினைக்கிறேன். சிலர் இதை அங்கீகாரத்திற்காக, புகழுக்காக பொய்யாகப் பேசுகிறார் கள். டாம்பீகமாகப் படைக்கிறார்கள். அவையெல்லாம் நிற்காது. மக்களால் அடையாளம் காணப்பட்டுவிடும்.

கோட்பாடுகளால் எற்படுகின்ற போராட்ட அனுபவத்தோடு வாழ்கின்ற வன் நல்ல இலக்கியத்தைப் படைப்ப தில் தோய்ந்து போவது கிடையாது. ஆனால் மற்றவர்கள் அப்படி அல்ல. படோடபமாய் படைக்கின்றவர்களை அடையாளம் காண தாமதம் ஆகலாம்.

இன்றைய ஊடகங்களால் உருவாக்கப்படும் பொது அறிவு ஒரு மந்தமான சூழலிலே இருக்கிறது. சமூக மாற்றத்திற்கான போராட்டம் ரஜினி அறிவித்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறார்கள். ஒரு பெரிய அரசியல் தலைவர் தன் மகனைவிட அறிவாளியாக வேறொருவர் இருந்துவிடக் கூடாது என்று நினைக்கிறார். பொருள் குறித்த ஓர் ஆழ்ந்த ஞானம் மக்களுக்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்று ஊடக அதிகாரம் வைத்திருப்பவர்கள் நினைக்கிறார்கள்.

■ உங்களின் கல்லூரிப் பேராசிரியர் வாழ்க்கை நிறைவைத் தந்திருக்கிறதா?

அரசியலுக்குப் போகவேண்டும், கலை இலக்கியத் தில் ஈடுபடவேண்டும் என்று நினைத்துத்தான் இத் துறையை தேர்ந்தெடுத்தேன். அரசியலுக்குப் போக முடியவில்லை. கலை இலக்கியத்தில் எனது பதிவை இப்போதுதான் தொடங்கி இருக்கிறேன். அது அதிருப்தி இல்லை. ஆனாலும் திருப்தி இல்லை. நான் போர்க்குண மிக்க இளைஞர்களை உருவாக்கும் கனவோடுதான் இந்தப் பணியில் நுழைந்தேன். ஆனால் கனவாகவே போய்விடுமோ என்றே தோன்றுகிறது.

■ எந்த இயக்கங்களிலும் இணையாமல் இருப்பது ஏன்?

கோட்பாடுகள் மீதான நம்பிக்கையில் மார்க்சிய லெனினியக் கட்சியில் இருந்தேன். ஆனால் அவர்களிடம் இந்தியா என்கிற பார்வை அழுத்தமாக இருப்பதை உணர்ந்தேன். தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிராக அல்ல சாதியத்திற்கு எதிராகவும் இந்தியம் பயன்படாது. அதனால் வெளியேற நேர்ந்தது.

தமிழகத்தில் தேசிய இயக்கங்கள் பேரியக்கமாக எதுவும் இல்லை. இருக்கிறது அவ்வளவே. பொருளாதார சாதிய ஆதிக்கத்திற்கெதிராக வலுவான குரல் கொடுக்கும் இயக்கங்கள் இங்கு குறைவே. புறநானூற்றுப் பாடல் ஒன்று.

இன்னாதம்ம இவ்வுலகம்
இனிய காண்க இதன்
இயல்புணர்ந்தோரே

எது எது சரியாகத் தோன்றுகிறதோ அப்போது என்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறேன். மற்றபடி ஒரு போராட்டத்திற்கு துணை நிற்கக் கூடிய படைப்பைத் தருவதற்கான பணியில் ஈடுபடுத்திக் கொண்டிருக் கிறேன்.

**காதலிக்கும் இருவருக்குள்ளும் சாதிகள் உடைகிறதெனில் மற்றவர்களின் உறவை நாம் எப்படிப் பார்க்கிறோம். சாதி இல்லாதவனாக இருக்கும்போது, காதலிப்பதால் சாதி உடைகிறது என்று சொன்னால் எப்படி?**

■ 'ஔவை' நாடகம் அப்படி உருவா னதுதானா?

நெடுங்காலக் கனவின் சிறு வெளிப்பாடு அது. தமிழகத்தில் கால காலமாய் நடக்கும் போராட்டத்தைப் பாட்டு வடிவிலும் நாடக வடிவிலும் ஆக்கிவிட வேண்டும் என்ற அவா என்னுள் தற்போது வேகமாக வளர்ந் திருக்கிறது. ஒவ்வொன்றாய் நான் பற்றி எரிவேன். முதலில் ஔவையை நான் ஏன் எடுத்தேன் என்றால், அறியப் பட்ட வரலாற்றில் முதல் அடிமை பெண்ணடிமையாகத்தான் இருந் திருக்கிறது. அதனால்தான் நான் அவ்வையில் ஆரம்பித்தேன்.

■ அந்நாடகத்தில் பெரும்பாலும் குறியீடுகளாகத்தான் காட்டியிருக்கிறீர்கள். முதல் அனுபவம் வாய்ப்பவர் களுக்கு அதுபோய்ச் சேருமா?

அரக்கோணத்தில் நாங்கள் நாடகம் போட்டபோது அங்குள்ள பெண்கள் மத்தியில் அது பெரும் வரவேற் பைப் பெற்றிருக்கிறது. நான் எடுத்துக் கொண்டது இலக்கியக் களமாக இருந்ததனால் சிறு தடை இருக்க லாம். அது சொற்களால் வந்த தடைதானே தவிர குறியீடு களால் அல்ல. ஏனெனில் தமிழர்களுக்குக் குறியீடு ஒன்றும் புதிதல்ல. அவர்களின் பழமொழிகள், விடுகதை கள் நாட்டுப்புறப் படைப்புகள் எடுத்துப் பார்த்தோ மென்றால் அதிலில்லாத குறியீடுகளையா நாம் சொல்லி விடப் போகிறோம். சொற்களால் வரும் தடைகளை இனிவரும் படைப்புகளில் செய்யமாட்டேன்.

■ மருத நிலத்தை மறுவாசிப்பு செய்ததுபோல அந் நாடகத்தில் மற்ற நிலங்களை மறுவாசிப்பு செய்ய வில்லையே?

உண்மைதான். கற்பு தோன்றிய காலத்திலேயே விபச்சாரமும் தோன்றியது. அதனால் அந்நிலத்தை அதிகக் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. கற்பு என்கிற கருத்தை நான் உடன்படாதது போலவே காதலை யும் உடன்படவில்லை. கற்பு என்பது பெண்ணடிமைத் தனத்தின் இறுகிய வடிவம் எனில் காதல் இளகிய வடிவம் அவ்வளவே. இரண்டுமே ஆணுக்குச் சேவை செய்ய உருவாக்கப்பட்டவை. ஆணுக்குப் பெண் உண்மையான வளாய் இருக்கவேண்டுமென்று காதலும் தான் சொல்லி வைக்கிறது. அன்பு என்பது ஒருத்தரிடம் மட்டும் செலுத்துவதல்ல. அது மானுடம் முழுமைக்கும் பொது.

பாலுறவு என்பது ஒரு பெண்ணுடைய விருப்பம். அன்புக்கு பாலுறவு தடையாக இருக்க முடியாது. அன்பு என்பது குறுகிய வட்டத்திற்குள் அடங்காதது. இன்னொன்று, காதலால் சாதி மதம் உடைபடுகிறது என்கிறோம். நான் கேட்கிறேன். காதலிப்பதால்தான் சாதி மதம் இல்லையா, இல்லையேல் இருக்குமா? சரி, காதலிக்கும் இருவருக்குள்ளும் சாதிகள் உடைகிறதெனில் மற்றவர்களின் உறவை நாம் எப்படிப் பார்க்கிறோம். சாதி இல்லாதவனாக இருக்கும் போது, காதலிப்பதால் சாதி உடைகிறது என்று சொன்னால் எப்படி?



■ அடுத்தடுத்த படைப்புகள் இதையொட்டியே இருக்குமா?

நிறைய இருக்கிறது. அரசு உருவாக்கத்தின்போது, ஆணாதிக்கம் எப்படி தோன்றுகிறது என்பது பற்றி சொல்லலாம். கபிலருடைய வாழ்க்கையைச் சொல்லலாம். பௌத்த மதம் தமிழகத்தில் நிறுவப்படும் காலகட்டம், களப்பிரர் காலகட்டம் என்று நிறைய இருக்கிறது. களப்பிரர்களைப் பற்றிய உண்மைகள் அறியப்படாமலேயே இருக்கிறது. பிற்காலச் சோழர்களுடைய வரலாறு. காந்தியின் கடைசி காலகட்டம் போன்றவை என்மனதில் உருவாக்கியிருக்கும் படைப்புகள் ஆகும்.

இதில், காந்தியின் கடைசிக் காலகட்டத்தை, கமல் ஹாசன் 'ஹேராம்' என்ற திரைப்படமாக எடுக்கிறாராம். நான் சொல்ல நினைப்பதுபோல அவரும் சொல்வாரா என்று தெரியவில்லை. எதற்கும் அப்படம் வெளிவந்த பிறகுதான் எனது படைப்பை உருவாக்கலாம் என்று நினைக்கிறேன்.

■ நீங்கள் நடத்தும் நாடகங்கள் செலவு அதிகம் ஆகிறதே?

பயிற்றுவிக்கிற காலம் நிறைய ஆகிறது. ஏனெனில் இதில் நடிப்பவர்கள் தொழில்முறைக் கலைஞர்கள் இல்லை. இவர்களுக்குக் கால அவகாசம் நிறைய தேவைப்படுகிறது.

இன்னொன்று, இந்த நவீன நாடகங்களுக்கு செலவு ஆகத்தான் செய்கிறது. இந்நாடக உருவாக்கத்திற்கு மங்கையின் முயற்சி பெரிது. அவ்வையின் நாடகம் என்னுள் ஐந்து ஆண்டுகளாக உருவாயிற்று. ஒவ்வொரு காட்சியும் நான் எழுதி முடிக்க என்னை ஊக்கப்படுத்தியது மங்கைதான்.

■ ஈழப்போராட்டம் பற்றி இசைப் பாடல்கள் எழுதியுள்ளீர்கள். நாடகப் படைப்பு ஏதேனும் உண்டா?

அவர்களுடைய வாழ்க்கையை உற்றுநோக்கிக் கொண்டிருக்கிறேன். அவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமெனில் இன்னும் அதிகமாய்த் தெரிந்துகொள்ள வேண்டும்.

■ பல்வேறு தேசிய இனப் போராட்டங்களை நீங்கள் அறிந்திருப்பீர்கள். உங்களின் பார்வையில் ஈழப் போராட்டம் பற்றி?

இன்றளவும் அயர்லாந்து விடுதலைப் போராட்டம் நடக்கிறது. பாலஸ்தீனப் போராட்டம், ஆப்பிரிக்க மக்களின் விடுதலைப் போராட்டம், வியட்நாம் போராட்டம் இப்படி நீளும் வரிசையில் எந்தவிதத்திலும் குறையாத விடுதலைப் போராட்டம் தமிழீழப் போர். தீவிரம் எந்தவிதத்திலும் குறைந்தது கிடையாது. போராட்ட நியாயத்தில் எந்த வித முரண்பாடும் கிடையாது. ஆனால், என்ன துன்பம் என்றால் தமிழீழம் அல்லாத, குறிப்பாக தமிழ்நாட்டு மக்களிடத்தில் ஈழப்போராட்டம் பற்றிய புரிதல் பின்தங்கிப் போயிருக்கிறது. உலகெங்கும் பரவிக்கிடக்கிற தமிழர்களின் ஆதரவுபோல் இங்குள்ள தமிழர்களிடத்தில் இல்லை. விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தை இங்குள்ள இயக்கங்கள் பரப்பவேண்டிய கடினமான பணி இருக்கிறது. தமிழ்நாட்டுக் கட்சிகளின் துரோகப்போக்கை அம்பலப்படுத்த வேண்டும். கட்சிகளின் மேடைப் பேச்சு இதற்குப் பயன்படாது. தமிழக மக்களின் மத்தியில் ஈழப்போராட்டம் பற்றித் தெளிவாகத் தெரியாமல் இருக்க, அல்லது பரவாமல் இருக்கத் தடையாக இருப்பவை எவை எனில் ஒன்று ஸ்ரீலங்கா அரசு மற்றொன்று இந்திய அரசு. இதை உணர்த்தவும், எதிர்ப் பிரச்சாரங்களைத் தகர்க்கவும் செய்தல் வேண்டும். எல்லா அரசுகளும் மக்களுக்கு எதிரான அரசுகளே. வியட்நாம் போராட்டத்திற்கு சோஷலிஸ்ட் நாடுகளே ஆதரவு தராத நிலை உண்டு. ஆனால் மக்கள் ஆதரவு என்றைக்கும் இருந்தது.

தமிழகத்தின் ஆதரவு நிலை சார்ந்தது அல்ல அது அலை சார்ந்தது. பாரதி

கஞ்சி குடிப்பதற்கிலார் – அதன்
காரணம் ஏதும் அறிகிலார் – என்பான்

அப்படித்தான் தமிழக மக்களின் நிலை இருக்கிறது.

சந்திப்பு : *பச்சியப்பன்*

# லண்டன் கண்ட இரு ஈழ நல் முத்துக்கள்

## ஆடல்மயில் ஆனந்தவல்லி- இசைக்குயில் குலபூஷணி



ஈழத்து ஆடல் மயில் ஆனந்தவல்லி

ஈழத் திருநாடு எங்கள் உயிர் மண். அந்த மண்ணில் பிறந்த அறிஞர்கள்- கலைஞர்கள்- மேதாவிகள்- ஞானிகள் பலர். புலவர் மணிகள் - நாதஸ்வர வித்துவான்கள்- தவில் வித்துவான்கள்- என்று பலரையும் பெற்றெடுத்த மண்- பொறியிலாளர்களையும்- மருத்துவர்களையும்- கணக்காளர்களையும்-கணக்கற்றுப் பெற்றெடுத்தபோது- கலையும்- அறிவும் மங்கிவிட்டதோ என்று எண்ண வைத்தது சில காலம்.

தட்சணாமூர்த்தியின் உயரத்துக்கோ- வீரமணி அய்யரின் வாரிசாகவோ- சோமசுந்தரப் புலவரின் வழித்தோன்றலாகவோ ஒருவரும் கண்ணில் படவே இல்லையே என்று தமிழ்த் தாய் கண்ணீர் விட்டாளோ- தவம் இருந்தாளோ- இன்று இரண்டு நல் முத்துக்களை லண்டனில் காணக்கூடியதாக இருந்தது.

ஒரு சாதாரண சங்கீத ஆசிரியரின் மகளாகப் பிறந்து- சங்கீத மேதை கல்யாணராமனிடம் குரு- சிஷ்யை பாரம்பரியத்தில் பயிலச் சென்று - அவரிடம் இசையை மெருகேற்றி- இசையின் பிரேமையினால் அவரையே கணவனாக வரித்து தெய்வீக இசைக்குத் தொண்டாற்றும் ஒருவர்தான் குலபூஷணி கல்யாணராமன். எவரையும் கவர்ந்திழுக்கும் மென்மையான குரல் வளம். சுரபேதமற்று - ரசிகாகளின் தேவையறிந்து- வழங்கும் கச்சேரிப் பாங்கு. யாவுமே அவரிடம் காணப்பட்டன.

குறொய்டன் சனசமூக நிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சி- காலதாமதமானாலும்- நிறைவான அதியுயர்ந்த ரசிப்புத் தன்மை கொண்ட ரசிகர்களினால் களைகட்டியது. விநாயகர் துதியில் ஆரம்பித்து- ராகம்- தானம்- பல்லவி தொடர்ந்த கீர்த்தனைகள்- அதி விசேடமான முறையில் கையாளப்பட்டது. சிந்து பைரவி- தோடி- கல்யாண வசந்தம்- போன்ற ராகங்களில் அன்று ரசிகர்களின் சங்கீத வேட்கைக்கு நன்றாகவே அமுது படைத்தார் குலபூஷணி. ஈழம் தந்த நல் முத்துக்களில் மேன்மையான முத்து இவர் என்று கூடியிருந்த அனைவரும் கரகோஷத்தினால் ஆமோதித்தனர். நிகழ்ச்சிக்கு பார்வையாளர் கூட்டத்தில் இருந்த காரைக்குடி கிருஷ்ண மூர்த்தியும் மனதாரப் பாராட்டினார்.

மிருதங்கம் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பது போல பரமசாமி கிருபாகரன் அனுசரணையாக வாசிக்க- சிறுவன் குமார் ரகுநாதன் வயலின் வித்தை காட்ட- கச்சேரி களை கட்டியது. தனி ஆவர்த்தனத்தில் கிருபாகரன் தனி முத்திரை பதிக்க- பிரகாஸ் கடத்தில் பதில் கொடுக்க- தாளவாத்தியக் கச்சேரி சிறப்பாகத் திகழ்ந்தது. மெய்மறந்து தாள வாத்தியத்தை ரசித்த வித்துவாட்டியை நாளை வேலைநாள் என்று கலாரசிகன் விமலும் நினைவூட்ட-

**யோகராஜா மாஸ்டர்**

கச்சேரி இனிதே நிறைவெய்தியது. யாழ்ப்பாணம் பெற்றெடுத்த திருமகள் எங்கிருந்தாலும் நறுமணம் வீசட்டும்.

இன்னொரு இனிய நடன நிகழ்ச்சி. இடம் லோகன் மண்டபம். ஆடியவர்- ஈழத்து நடனதாரகை ஆனந்தவல்லி. கணவரின் பெயரோ- தந்தையின் பெயரோ மலரில் இல்லை. உலகம் வளர்ச்சியடைந்து பெண்ணிலை வாதம் மின்னும் இந்நாட்கள் நல்ல நாட்கள்தான். 'அடங்காத் தமிழன்' என்றால் 25 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்- சிங்களவர் அனைவருக்கும் அது மாமேதை சுந்தரலிங்கம் என்பது தெரியும். (மாமேதையா? மமதையா?) அம் மேதையின் மகளின் மகள்தான் இந்த ஆனந்தவல்லி. அவுஸ்திரேலியாவில் நாட்டியப் பள்ளி நடத்தி வரும் ஆனந்தவல்லி நடனமாடிய பாங்கே அலாதி.

மல்லாரியோடு ஆரம்பித்து- வர்ணம்- பதம்- என்று தேர்ந்த நல்முத்திரைகளால் ரசிகர்களைக் கட்டிபோட்




ஈழத்து இசைக்குயில் குலபூஷணி

டது. ''சுவாமி நான் உந்தன் அடிமை...'' என்று நாட்டைக் குறிஞ்சி ராகத்தில் ராஜசேகரன் கோலம் போட- நான்கு கதைகளைப் பாவத்தால்- காலால்- கண்களால்- அசைந்தாடும் தென்றலாக பக்தி என்ற பரவசத்தை ஊட்டி- வர்ணம் இப்படியும் மிளிருமா என்பதுபோல் அரங்கத்தை தன் வசப்படுத்தினார் ஆனந்தவல்லி. புதியதோர் நிகழ்வாக வர்ணம் அமைய- மானாகத் துள்ளி வந்து- மாரீசனை மனக் கண் முன்னால் நிறுத்தியது. 'யாரென்று ராகவனை..' என்று அருணாசலக் கவிராயரின் ராம நாடகத்தின் ஒரு பகுதி -மாமல்லபுரத்து சிவகாமியின் சிலைகளை வினுவின் ஓவியமாகப் பார்த்த ரசிகர்களுக்கு சில கணங்கள் சித்திரமே உயிர்பெற்றது போல காட்சியளித்தார் நாட்டிய மேதை.

இறுதியாக தில்லானாவுக்கு முன்னால் ஆடிய பதம் யாவரையும் கொள்ளை கொள்ளும் விதத்தில் கையாண்டு- நங்கை நல்லாள் நடனமாட- காலாஷேத்திராவைச் சேர்ந்த கிருஷ்ணவேணி அம்மையார் பாட- இனிதே நடந்து முடிந்தது இந் நிகழ்ச்சி.

ஈழம் தந்த நல்முத்துக்களையும் தேர்ந்தெடுத்து- ஈழ ரசிகர்களுக்கு முன்னால் இவர்களை அழைத்து வந்த இரண்டு அமைப்புக்களைப் பாராட்டியே ஆகவேண்டும்.

ஒன்று 'சங்கரா பைன் ஆர்ட்ஸ்'. மற்றது- சுருதி லய சங்கம். இந்த இரு அமைப்புகளையும் சேர்ந்த திருமதி அமராவையும்- மாவிட்டபுரத்தில் பிறந்து வளர்ந்த ஈழத்துப் பரதனையும் 'தொடர்க உங்கள் கலைச்சேவை' என்று உற்சாகப்படுத்துவோம்.



‘உதயன்’ ஆசிரியர் லோகேந்திரலிங்கத்துக்கு விருது



உணர்ச்சி பொங்க உரை நிகழ்த்திய கவிஞர் வைரமுத்து



கவிஞருடன் பிரபல பத்திரிகையாளர் திருச்செல்வம்

# கனடா ‘உதயன்’ பெருவிழா

## ‘ஈழத் தமிழர் மகாகாவியத்தை இங்கு அரங்கேற்றுவேன்’ ரொறொன்ரோவில் கவிஞர் வைரமுத்து உணர்ச்சி உரை

‘‘இருபதாம் நூற்றாண்டில் உலக அரங்கில் தமிழினத்துக்கு முகவரி எழுதிக் கொண்டிருப்பவர்கள் ஈழத் தமிழர்களே. ஈழத் தமிழர் மகா காவியம் எழுதப்போகிறேன். என் நண்பரும்- பிரபல பத்திரிகையாளருமான திருச்செல்வம் அவர்கள் கேட்டுக் கொண்டவாறு அந்த நூலைக் கனடாவுக்கு எடுத்து வந்து இங்கேயே அரங்கேற்றம் செய்வேன்'' என்று கனடாவின் முன்னணி வாரப் பத்திரிகையான ‘உதயன்’ மூன்றாவது ஆண்டு பூர்த்தி விழா- ரொறொன்ரோ- ஸ்காபரோ சேர். ஜோன் மக்டொனால்ட் கல்லூரி அரங்கில் நடந்தபோது- தலைமைதாங்கிய தமிழ்கூறும் நல்லுலகின் முதன்மைக் கவிஞரான வைரமுத்து பேசும்போது குறிப்பிட்டார்.

இரு நாட்கள் நடந்த இப் பெருவிழாவில் தலைமை தாங்கிய கவிஞர் வைரமுத்து கவித்துவ வசீகரத்தினாலும்- அவையோரை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி- ஆனந்தக் கூத்தாடச் செய்தார். நிமிடத்துக்கு நிமிடம் அரங்கத்தை அதிரச் செய்த கரகோஷம் கவிஞரைத் திக்குமுக் காடச் செய்து-மேலும் உற்சாகமாகக் கவிநடம் புரிய வைத்தது.

இரண்டு நாட்களும் கவிஞர் வைரமுத்து ஆற்றிய உரை ஈழத் தமிழர்பால் அவர் கொண்டு இருக்கும் வாஞ்சையையும்- எமது மக்களது விடுதலைப் போராட்டத்தின் மீது அவர் வைத்திருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையையும் வெளிப்படுத்துவதாகவும் அமைந்திருந்தது. ‘‘தமிழீழம் மலர்வது நிச்சியம்'' என பல தடவைகள் உரத்து உரத்துச் சொன்னார்.


கவிஞரைக் கௌரவிக்கும் வகையில் ஐந்து நிறுவனங்களின் அதிபர்கள் அவருக்குத் தங்கப் பதக்கங்களைச் சூட்டினர். அவைகளை மகிழ்வோடு ஏற்றுக்கொண்ட அவர்- ‘‘எனது கழுத்தை அலங்கரிக்கும் தங்கத்தை விடத் தமிழ்ப் போராளிகளின் இதயத்தை மதிக்கிறேன்'' என்று கூறி அந்தப் பதக்கங்களை தமிழர் புனர் வாழ்வுக் கழகத்திடம் வழங்கினார்.

முதல்நாளின் முன்னுரிமை நிகழ்ச்சியாக கவிநாயகர் வி. கந்தவனம்- சிவா சின்னத்தம்பி- சக்கரவர்த்தி- சுமதி ரூபன் ஆகியோர் கலந்து கொண்ட ‘சின்னச் சின்ன ஆசை’ கவியரங்கம் நடைபெற்றது.


இரண்டு நாட்களும் ‘உதயன்’ வாசகர்களாலும்- கலாரசிகர்களாலும்- மண்டபம் நிரம்பியிருந்தது. கவிஞர் இரண்டு நாட்களும் அரங்க வாசலில் இருந்து மலர் மாலை அணிவிக்கப்பட்டு- மேள வாத்தியங்களுடன் ஊர்வலமாக உள்ளே அழைத்து வரப்பட்டபோது- அரசவையில் புலவர்கள் மரியாதை செய்யப்பட்ட காட்சி மனக் கண்முன்னால் வந்தது.

இரண்டு நாட்கள் விழாவையும் நடா ராஜ்குமாரின் ‘கீதவாணி’ 24 மணி நேர வானொலி நேரடியாக அஞ்சல் செய்தது. அவுஸ்ரேலியா- இலங்கை- ஐரோப்பிய நாட்டுத் தமிழர்களும் கேட்க வசதி செய்து அனைவரது பாராட்டையும் பெற்றது. ‘உதயன்’ ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம்- ‘கீதவாணி’ நடா ராஜ்குமார் ஆகியோர் கவிஞர் வைரமுதத்துவினால் பதக்கம் சூட்டியும்- விருது வழங்கியும் கௌரவிக்கப் பெற்றனர்.


கனடா தமிழர் இதயங்களை நிறைத்து- நிறைவு பெற்ற ‘உதயன்’ பெருவிழா வைப் பற்றி நிறைவாகவே மக்கள் பேசுகின்றனர். 0



‘தமிழன் வழிகாட்டி’ செந்தில்



‘கீதவாணி’ நடா ராஜ்குமாருக்கு கவிஞர் கௌரவம்



நிறைந்து வழிந்த கூட்டத்தின் ஒரு பகுதி

## INTERNATIONAL COLLEGE OF ACCOUNTANCY

ACCOUNTING * COMPUTING * TRAINING

Courses offered:

### ACCOUNTANCY

**AAT-**
Association of Accounting Technicians
All levels

**CACA-**
Chartered Association of
Certified Accountants

**CIMA-**
Chartered Institute of
Management Accountants

### COMPUTER COURSES

**ACP**
Association of Computer Professional
Certificate/Diploma
(Internally examined & moderated by ACP)
Short course - Word Processing
Spread Sheet
other popular Accounting Software Packages

### ENGLISH AS A FOREIGN LANGUAGE

**EFS - Parts 1 & 11**

SATURDAYS SPECIAL CLASSES FOR
6 Years to 11 Years

Full/Part/Evening/Weekend/Revision/Course commence in Sept./Oct.&Jan./Feb.

# TUITION CENTRE
# 25 TRINITY ROAD, TOOTING,
# LONDON SW17 7SQ.
# Tel: 0181 672 0448



## ஜெயலலிதா நடத்தும்

# ‘நீதிமன்றக் கண்ணாமூச்சி’

ஜெயலலிதா மீதான ஊழல் வழக்கு விசாரணைகளெல்லாம் ஒவ்வொன்றாக வேகம் பிடிக்கத் தொடங்கியுள்ளன. தனி நீதிமன்றத்தையே தன்னுடைய அசுரத்தனமான ‘பலத்தினால்’ தகர்த்துவிட ஜெ. கையாண்ட அத்தனை தந்திரோபாயங்களும் செயலிழந்து விட்டன. இப்போது ஜெயலலிதா கூட்டத்தினரின் தண்டனை நாட்கள் எண்ணப்படுகின்றன. இந்தச் சூழலிலும் அசராமல் ஜெ.வும் அவரது ‘குற்ற சகாக்களும்’ நீதிமன்றத்துக்கே கண்ணாமூச்சி காட்டிக் கொண்டுள்ளனர்!

ஜெயலலிதா, சசிகலா, முன்னாள் ஆமைச்சர் முகமது ஆசிப் ஆகிய மூவரும் டான்சி வழக்கில் முக்கியமான எதிரிகள். இந்த வழக்கை மூன்றாவது தனி நீதிமன்ற நீதிபதி அன்பழகன் விசாரித்து வருகிறார். ஆனால் இந்த வழக்கில் குற்றச்சாட்டுகளை பதிவு செய்ய நீதிபதியே படாத பாடுபட்டு வருகிறார். பல்வேறு காரணங்களுடன் ஜெ. வழக்குரைஞர்கள் நீதிமன்றத்திற்குள்ளேயே அமளி துமளி நடத்தி வருகின்றனர்.

மே 28ஆம் தேதி குற்றச்சாட்டுகளை பதிவுசெய்யவிருப்பதால் அனைத்து எதிரிகளும் ஆஜராக வேண்டுமென்று நீதிபதி உத்தரவிட்டார். உடனடியாக முகமது ஆசிப் ஓடிப்போய் மருத்துவமனையில் படுத்துக்கொண்டார்! இதயத்தின் ஓரமாய் கோளாறு என்ற ஒப்பாரி மனுவை நீதிபதியிடம் சமர்ப்பித்தனர் அவருடைய வழக்குரைஞர்கள். அதனால் வழக்கை மே 31ஆம் தேதிக்கு தள்ளிவைத்தார் நீதிபதி. ஆனால் 31ஆம் தேதியும் ஆசிப் ஆஜராகாமல், இதயக் கோளாறு... அவசர சிகிச்சைப் பிரிவு... என்று இழுத்தடித்தார்.

ஆனால், இம்முறை நீதிபதி ஜெ. குழுவினரின் நாடகத்தை நம்பவில்லை. இன்றைக்கு அவர்கள் ஆஜராகவில்லை எனில் பிடிவாரண்டு பிறப்பிப்பதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை என்று தட்டச்சரை அழைக்க, பதறிப்போன ஆசிப்பின் வழக்குரைஞர் ஜோதி, மாலைக்குள் ஆசிப்பை ஆஜர் படுத்துவதாகக் கூறினார். ‘ஆசிப்பை நீதிமன்றத்துக்கு அழைத்து வரும் போது சவப் பெட்டி தூக்குபவர்களையும் அழைத்து வாருங்கள், என்று ஆவேசமாய் முழங்கினார் ஜோதி. கூடவே ‘மனிதாபிமானமற்ற முறையில் ஆசிப்பை நடத்துகிறார்கள். ஆகவே ஒட்டுமொத்த சிறுபான்மைச்சமூகமும் கோபத்தில் உள்ளது’ என்று தன்னுடைய சிறுபான்மை பாசத்தை வெளிப்படுத்தினார். நீதிபதியின் கண்டிப்புக்குப் பிறகு வேறு வழயின்றி ஜெவும் சசியும் விழுந்தடித்துக்கொண்டு தங்கள் படை பட்டாளங்களுடன் முழங்கிக் கொண்டே நீதிமன்றம் வந்தனர். ஆசிப் ஆம்புலன்சில் கொண்டு வரப்பட்டார்.

ஆசிப்பின் உடல்நிலை குறித்து அரசு மருத்துவர்களை பரிசோதிக்க வைத்தார் நீதிபதி. மருத்துவர்கள் ஆசிப்பை சோதித்துவிட்டு ‘எந்தக் கோளாறும் இல்லை, அவர் நல்ல நிலையில் சீராக இருக்கிறார்’ என்று சான்றிதழ் கொடுத்தனர். ஆனாலும் ஆசிப் தொடர்ந்து மரண வாயிலில் துடிப்பதுபோல் மௌனப் படுக்கையிலேயே இருந்தார்.

உடல்நிலை குன்றியதாகச் சொல்கிற ஆசிப்பை தவிர்த்து மற்றவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை பிரித்து பதிவு செய்யலாமென்று நீதிபதி சொல்ல, அதற்கும் வழக்குரைஞர் ஜோதி ஒப்புக்கொள்ளவில்லை. எனவே வழக்கு 3ஆம் தேதிக்கு தள்ளி

வைக்கப்பட்டுள்ளது. ஆனாலும் ஆசிப்பின் இதயக் கோளாறு நாடகம் தொடரும் போல் தெரிகிறது!

இரண்டு வாய்தாக்களுக்கு 'வைரஸ் காய்ச்சல்' என்று நீதிமன்றத் துக்கு கணக்குக் காட்டிய ஜெயலலிதா, 31ஆம் தேதி வேறு வழியின்றி ஆஜ ராகவேண்டிய கட்டாயத்துக்கு ஆளா னார். நீதிமன்றத்துக்கு 'அம்மா' வரும் தகவல் அறிந்து 'அன்னையே வருக' சுவரொட்டிகள் அவசர அவசர மாக சுவர்களை அலங்கரித்துக் கொண்டன.

தனி நீதிமன்றத்தில் வாதிடுகின்ற ஜெ.வின் வழக்குரைஞர்கள் நீதிபதி யை மிரட்டும் தொனியிலும், அரசியல் மேடையைப் போல தரக் குறைவாகவும் நீதிமன்ற நெறிமுறை களையே மீறி வருகின்றனர். வாதத் தின் போதே, கூட்டமாக ஜெ. வழக்குரைஞர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் (?) அரசு வழக்குரை ஞருக்கு எதிராக முழக்கமிடுவது... போன்ற கூத்துகளும் நீதிமன்றத்தில் சென்ற வாரம் அரங்கேறின. மூத்த வழக்குரைஞர்களும், நீதிபதிகளும் இதுகுறித்து தங்கள் அதிர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

மத்திய அரசைத் தன் கைப்பிடிக் குள் வைத்துக்கொண்டு தன் மீதான வழக்குகளையெல்லாம் செல்லாக்கா சாக்க முயன்றார் ஜெ. ஆனால் ஜெ.வின் பிடி நழுவி, மத்திய அரசு விழுந்து, இப்போது வழக்கு பழைய படி வேகமாக நகர்ந்து வருகிறது. அடுத்தத் தேர்தலில் எப்படியும் தம் கூட்டணி ஜெயித்து, சோனியா பிரதமராகி விடுவார் என்ற கனவில் மனப்பால் குடிக்கும் ஜெ. அதுவரை வழக்கை தள்ளிப் போட வேண்டு மென்று பல்வேறு நாடகங்களை நடத்தி வருகிறார். எப்படியும் ஜெ. மீதான வழக்குகளை விரைந்து விசா ரித்து, வரும் சட்டமன்றத் தேர்தலுக் குள் ஜெ.வுக்கு தண்டனை வாங்கித் தந்துவிட்டால், தேர்தலில் அவர் நிற்கமுடியாத நிலை வந்துவிடும். எனவே அதனை செய்து முடிப்பதே தமது கடன் என்று கலைஞர் அரசும் விரைந்து செயல்பட்டு வருகிறது.

எப்படியோ, ஜெ.வும் அவரது கூட்டமும் பெறுகின்ற தண்டனை யைக் கண்டு அடுத்து எந்த அரசியல் வாதியும் ஊழல் செய்யவே அஞ்ச வேண்டும். அப்படியான தீர்ப்பு வரும் நாளுக்காகத் தமிழகமே காத்திருக்கிறது!

# அனுதாப அலை தேடும் சோனியா?

இந்திய பாராளுமன்றத் தேர்தல் நெருங்க நெருங்க கட்சிகள் மக்களிடம் அனுதாபம் பெற பல்வேறு யுத்திகளை கையாளத் தொடங்கியுள்ளன. மக்களிடம் நேர்மையாக பிரச்சாரம் செய்து, சாதனைப் பட்டியலை விளக்கி, வாக்கு கேட்க முடியாத 'யோக்கிய மிகு' மக்கள் தொண்டை செய்து வந்திருக்கின்றனர்? எனவே, தாம் கரையேற அனுதாப அலை தேவை என்பதைக் கட்சிகள் தெளிவாக கணித்துள்ளன.

காங்கிரஸ் வழக்கப்படி சாவு ஒப்பாரி வைக்கத் தொடங்கியுள்ளது. காந்தியின் கொலையில் தொடங்கிய ஒப்பாரி, இந்திரா, ராஜீவ் என்று நீண்டது. முன்பு செத்ததை வைத்து வாக்குக் கேட்டனர். ஆனால் இப்போது 'சோனியாவை கொல்ல சதி?' என்று முன்கூட்டியே ஒப்பாரி வைக்கத் தொடங்கியுள்ளனர். எல்லாம் வளர்ச்சிதான்!

சோனியாவை புலிகள் கொல்ல சதி செய்கின்றனர் என்ற ஆதாரமற்ற அவதூறை திட்டமிட்டே சோனியாவும், அவரது கூட்டணியிலுள்ள கோமாளி சு.சாமியும் பரப்பி வருகின்றனர். சு.சாமிக்கு வால் பிடிக்கும் 'இந்து' பத்திரிகை விரிவான முன் பக்க செய்தியை வெளியிட்டு மீண்டும் புலி பீதியை ஏற்படுத்தி வருகிறது.



சோனியாவைக் கொலை செய்ய சதித் திட்டம் தீட்டப்படுகிறது. வடமாநிலங்களில் சீக்கிய, காஷ்மீர் தீவிரவாதிகள் மூலமாக புலிகள் சதி செய்யத் திட்டமிட்டுள்ளனர். தேர்தல் சமயத்தில் இந்த சம்பவம் நடத்தப்படலாம்... இப்படி யூகமான கண்டுபிடிப்புகளை இந்து வெளியிட்டுள்ளது. இப்படியெல்லாம் தென்னாப்பிரிக்காவிலுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பினர் மாநாடு கூட்டி விவாதித்தார்களாம்! இந்த செய்திக்கெல்லாம் ஆதாரம் தருவது யாரென்றால் அனைத்துலகக் கோமாளி சு.சாமி!

இந்து பத்திரிகையின் செய்தியாளர் நாட்டிற்கு வரப்போகிற ஆபத்தைக் கண்டறிந்து செய்தி வெளியிட்டுள்ளார். எனவே அவரை உடனடியாக காவல்துறை விசாரிக்க வேண்டாமா? மௌனமாக இருக்கிறது காவல்துறை.

விடுதலைப் புலிகள் இயக்கம் இந்த அவதூறை மறுத்து அறிக்கை வெளியிட்டுள்ளது. தமிழகத்தில் எது நடந்தாலும் புலிகள் மேல் பழி போடுவதையே வழக்கமாக செய்து வருகிற சு.சாமி, சோ, வாழப்பாடி கூட்டத்தினர்தான் சோனியாவுக்கு எதிராக சதி செய்துவிட்டு, சம்பவங்கள் நடத்திவிட்டு தேர்தலில் வெல்ல முடியுமா? என்று திட்டமிட்டுக் கொண்டிருக்கக்கூடும்! எனவே இவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணித்தால் போதும் நாட்டில் பல்வேறு சதிகள் அம்பலப்பட்டுப் போகும்.

அரசியல் அரங்கத் தொகுப்பு : **இரா.சுப்பிரமணி**

## கம்யூனிஸ்டுகளின் கண்ணியத்தைக் காணவில்லை

இந்தியாவில் மார்க்சியம் மலர வேண்டுமெனில் அன்னை சோனியாவும் – புரட்சித் தலைவி ஜெயலலிதாவும் எங்கள் இயக்கத்துக்கு தலைமையேற்க வேண்டுமென்ற கோரிக்கை வைக்காததுதான் பாக்கி. அதற்குக் கொஞ்சம் கூடக் குறைய 'மேதகு நிலையை' இந்தியக் கம்யூனிஸ்டுகள் எய்திவிட்டனர். வலது – இடதென்ற வித்தியாசமின்றி சாயம் போயே விட்டனர்.

மதவாத எதிர்ப்பு முகமூடியை அணிந்துகொண்டு, காங்கிரசுக் கட்சியின் சுமைகளைத் தோளில் தாங்கிக் கொள்ளத் தயாராகிவிட்டனர் கம்யூனிஸ்டுகளின் தலைவர்களான சுர்ஜித் சிங்கும், ஜோதிபாசுவும்! காங்கிரசுக் கட்சி மதவாதத்தைக் கைவிட்டுவிட்டு பரிசுத்த பிதாவாகி விட்டதாக காரல்மார்க்ஸ், சுர்ஜித் கனவில் வந்து சொன்னாரோ என்னவோ, காங்கிரசைக் காப்பதே பிறவிக் கடனென்று களத்தில் இறங்கி இருக்கிறார்.

பா.ஜ.க. – காங்கிரசு என்ற இருபெரும் பாசிஸ்டுகளையும் ஒருசேர வீழ்த்த வியூகம் அமைப்பதை விடுத்து காங்கிரசுக்குள் தோழமையாய் கலந்து, கரைந்து போகத் தொடங்கியுள்ளனர்.

அந்நியரான சோனியா பிரதமராகலாமா? என்ற விவாதம் எழுந்தால், சோனியாவை முந்திக்கொண்டு வக்காலத்து வாங்குகிறார் சுர்ஜித்! சுர்ஜித்தின் வேகம் கண்டு நமது தலைகளுக்கே உலை வைத்து விடுவாரோ என்று காங்கிரசாரே அஞ்சுகின்ற அளவுக்கு 'காங்கிரசு பக்தி' கம்யூனிஸ்டுகளின் நெஞ்சங்களில் குடியேறியுள்ளது.

தமிழகத்தில் ஊழல் பேயான ஜெ.யுடன் கைகோர்க்கவும் கம்யூனிஸ்டுகள் பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றனர். ஊழலை சட்டம் தண்டிக்கும். ஆனால் மதவாதம் ஊழலைவிட ஆபத்தானது என்று இந்த மக்கள் தொண்டர்களின் மகத்தான பொன்மொழிகளில் புளங்காகிதம் அடைவதைத் தவிர வேறு வழியில்லை.

ஊழல் சேற்றில் பூத்த 'இலை'க்குள்ளும் – பாசிச 'கை'க்குள்ளும் அரிவாளும், சுத்தியும், சிவப்பும் புதைந்து கொண்டுள்ளது. காணாமல் போய்க் கொண்டிருக்கிறது இந்தியக் கம்யூனிஸ்டுகளின் கண்ணியம்!

## வீரமணியின் மதவாத எதிர்ப்புப் போர்!



ஜெயலலிதா - பா.ஜ.க.வை ஆதரித்தபோது, மெல்ல இடித்துரைத்து, ஜெ.வுக்கு சில வேண்டுகோள்களை மட்டுமே சமர்ப்பித்துவிட்டு மௌனமாகி விட்ட திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் ஆசிரியர் வீரமணி, இப்போது ஆவேசம் கொண்டு பொங்கியெழுந்து விட்டார்.

'தி.மு.க. - பா.ஜ.க.வுடன் கூட்டணி வைப்பதா?' 'தி.மு.க. மதவாதக் கட்சியாகி விட்டது' என்று ஆவேசக் குரலெடுத்து முழங்கத் தொடங்கியிருக்கிறார். தமிழகமெங்கும் மதவாத எதிர்ப்புப் போர் நடத்தப் போவதாகவும் கூட்டம் போடவும் தொடங்கியிருக்கிறார்.

தி.மு.க. - மதவெறிக் கட்சியான பா.ஜ.க.வுடன் கைகோர்த்ததை பெரியாரின் மண்ணான தமிழகம் ஒருபோதும் ஒப்பவில்லை. ஆனால் வீரமணியின் தற்போதைய திடீர் மதவெறி எதிர்ப்பு ஆவேசத்தைக் கண்டுதான் மக்கள் மிரண்டு போயுள்ளனர்!

ஜெ. ஆட்சியில் இருந்தபோது, அ.தி.மு.க.வின் பகுத்தறிவு அணிபோல் வால் பிடித்த இவர், இன்றைக்கு அம்மாவை குளிரவைக்க வேண்டுமென்று, தி.மு.க. சேர்த்துக் கொள்ளாத தனி நபர் கட்சிகளை அணி சேர்த்துக் கொண்டு ஜெ.வுக்காக மறைமுக தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

கலைஞர் மீதான தனிப்பட்ட கோபத்தில் ஜெ.வின் கரத்தை பலப்படுத்த சோவுக்கு அடுத்தபடியாக போயஸ் தோட்டத்து ஆலோசகராக செயல்பட்டு வந்த வீரமணி, இப்போது திடீரென கொள்கை முழக்கமிடுவதைக் கண்டு நகைக்கத்தான் தோன்றுகிறது.

## சுயநலப்போர்!

*இந்திய - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையேயான தீராத காஷ்மீர் பிரச்சினை இப்போது மீண்டும் வெடியோசையுடன் புறப்பட்டுள்ளது. இந்திய எல்லைக்குட்பட்ட கார்கில், திரோஸ் உள்ளிட்ட பனிமலைப் பகுதிகளுக்குள் பாகிஸ்தானில் பயிற்சிபெற்ற தீவிரவாதிகள் ஊடுருவி விட்டனர். அவர்கள் இந்தியாவுக்கெதிரான சதி நோக்கத்துடன் கூடாரம் அமைத்துள்ளனர். அவர்களை விரட்டி அடிக்காமல் ஓயப்போவதில்லை என்ற அறிவிப்புடன் இந்தியப் போர் விமானங்கள் குண்டுகளை வீசத் தொடங்கின. இதுவரை நடந்த போரில் 50க்கும் மேற்பட்ட இந்திய இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர். பாகிஸ்தான் தன் படைகளை எல்லைப் பகுதியில் குவித்துக்கொண்டே இருப்பது மேலும் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.*

*இந்தியப் போர் விமானி நசிகேதன் போர்க் கைதியாக பாகிஸ்தான் சிறையிலடைக்கப்பட்டுள்ளார். இந்தியா தன் எல்லைக்குள் உள்ள தீவிரவாதிகளை விரட்டுவோம் என்கிறது. இந்தியாவுக்கு பதிலடி கொடுப்போம் என்கிறது பாகிஸ்தான். எல்லைப் பிரச்சினை, தீவிரவாதிகள், பரஸ்பரம் சீர்குலைவு நோக்கம் என்பது இரு தரப்பிலும் தலைமுறையாகவே நீண்டு வரும் புகைச்சல்.*

*இன்றைய குண்டு வீச்சுகளுக்கு காரணம் இரண்டு பெண் அரசியல்வாதிகள் எனலாம். பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், எதிர்க்கட்சித் தலைவரான பெனாசீரின் நெருக்கடிகளிலிருந்து மீள வேண்டுமெனில், அரசியல் சூழலை திசை திருப்ப போரே தீர்வென்று முடிவெடுத்துவிட்டார். இந்தியாவில் வாஜ்பாய் சோனியாவின் அனுதாப அலை, கண்ணீர்... இவற்றையெல்லாம் சமாளிக்க வேண்டுமெனில் மக்களை திசை திருப்ப வேண்டும். எனவே பாகிஸ்தான் எதிர்ப்பு அஸ்திரமே அதற்குச் சரியான வழி என்ற மனக்கணக்கில் களமிறங்கியுள்ளார். மக்களின் வரிப் பணம், உயிர்கள் எல்லாம் அரசியல் விளையாட்டுக்காகவும், சுயநலத்துக்காகவும் பலியாகிக் கொண்டிருப்பது வேதனையான ஒன்றல்லவா?*

# MARKANDAN & Co

## SOLICITORS & ADMINISTRATORS FOR OATHS

## IMMIGRATION/ HOME OFFICE

**REFUGEE-ASYLUM APPLICATIONS**
**HOUSE-FLAT PURCHASE OR SALE**
(Competitive rates)
**COMMERCIAL CONVEYANCING**
**LICENSING**
**LANDLORD & TENANT DISPUTES**
**MATRIMONIAL & FAMILY MATTERS**
**CIVIL & CRIMINAL LITIGATIONS**
**ISLAMIC LAW**
WRITTEN DETAILS ON REQUEST
***REPRESENTATION AT POLICE STATION ETC.***
**WILLS & PROBATE**
**ACCIDENT CLAIMS**
**DEBT COLLECTION**
**INJUNCTIONS**

## NO APPOINTMENT NECESSARY

HOME OFFICE & PORT VISITS
***WE ARE ALWAYS FRIENDLY, EASY TO TALK TO AND KEEN TO HELP***

## Telephone: 0181-514 8188

Thamil House,
720 Romford Road,
Manor Park, London E12 6BT

## Fax: 0181-514 8303

& M Co



★ பாராளுமன்றத் தேர்தலில் பாரதிய சனதாக் கட்சியுடன் தேர்தல் உடன்பாடு கொள்வதென்று தி.மு.க. பொதுக்குழு சூன் 2ஆம் நாள் முடிவு செய்தது. இதனால் மூப்பனார் தலைமையிலான தமிழ்மாநில காங்கிரஸ் அதிகம் தடுமாறிப் போயிருக்கிறது. தி.மு.க.வுடன் இனி கூட்டணி கிடையாது என மூப்பனார் அறிவித்திருக்கிறார். அதே நேரம் ஜெயலலிதாவுடன் சேருவதா இல்லையா என்பது பற்றி எந்த ஒரு தீர்க்கமான முடிவையும் அவர் சொல்லவில்லை. கடைசி நேரத்தில் ஜெயலலிதாவுடன் மூப்பனார் சேருவாரானால் தமாகாவிலிருந்து ப.சிதம்பரம் தலைமையில் ஒரு அணி பிரிந்து தி.மு.க. அணியுடன் சேரக்கூடும்.



★ தாழ்த்தப்பட்ட மக்களின் ஓட்டு வங்கியைக் கையில் வைத்துள்ள கிருஷ்ணசாமியும் எந்த அணியுடன் சேருவது எனத் தெரியாமல் தடுமாறுகிறார். மதச்சார்பற்ற சக்திகளோடுதான் சேருவோம் என்று சொல்லி அ.தி.மு.க. அணியில் சேரப் போவதை மறைமுகமாகத் தெரிவித்தார். அ.தி.மு.க. ஊழல் கட்சி என்று கடுமையாக எதிர்த்தீர்களே என்று கேட்ட போது, ஜெயலலிதா சில விசயங்களுக்காக மன்னிப்புக் கேட்டால் அ.தி.மு.க.வுடன் சேருவோம் என்றார். மன்னிப்பு என்ற வார்த்தையைக் கேட்டதும் ஜெயலலிதா கடும்கோபம் கொண்டிருப்பதாகவும் இப்போது கிருஷ்ணசாமி எந்தப் பக்கமும் போக முடியாமல் தடுமாறிக் கொண்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இப்படி எப்பக்கமும் சேர முடியாதவர்கள் வழக்கமாகப் பாடும் மூன்றாவது அணி என்னும் பாட்டை கிருஷ்ணசாமியும் தற்போது பாடியுள்ளதிலிருந்து அச்செய்தி உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.



★ இதுவரை தேர்தலில் போட்டியிடாமலும் வாக்களிக்காமலும் தேர்தலைப் புறக்கணித்து வந்த விடுதலைச் சிறுத்தைகள் எனும் தாழ்த்தப்பட்டோர் அமைப்பு இம்முறை தன் முடிவை மாற்றிக் கொண்டுவிட்டது. பல்வேறு தாழ்த்தப்பட்ட அமைப்புகளையும் ஒருங்கிணைத்து தேர்தலில் போட்டியிட முடிவு செய்திருக்கிறது. வை.பாலசுந்தரம், செ.கு.தமிழரசன் போன்ற தாழ்த்தப்பட்ட தலைவர்கள் இம்முயற்சிக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

★ கடந்த பாராளுமன்றத் தேர்தலின்போது ம.தி.மு.க. அலுவலகம், பா.ம.க. அலுவலகம், த.ரா.கா. அலுவலகம் என்று தோழமைக் கட்சி அலுவலகங்களுக்கெல்லாம் சென்று அவர்களை உற்சாகப்படுத்தினார் ஜெயலலிதா. அவரின் இந்தப் போக்கு தமிழக மக்களுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது. தன் வீட்டை விட்டு வெளியில் வராமலே காரியம் சாதித்துக் கொண்டிருந்தவர் இப்போது சின்னச் சின்ன கட்சி அலுவலகங்களுக்குக் கூடச் செல்கிறாரே என்று வியந்தனர். இப்போதோ நிலைமை இன்னும் மோசம். போயஸ் தோட்டத்திலேயே இருந்தாலும் அவரை வந்து சந்திக்கும் தலைவர்கள் (!) பட்டியலைப் பார்த்தால் 'ஜெ'வின் பரிதாப நிலை தெரியும். ஜெகவீர பாண்டியன், தீரன், ஜி.ஏ.வடிவேலு இவர்கள் தவிர சாதிச் சங்கத் தலைவர்கள், விவசாய சங்கத் தலைவர்கள் ஆகியோர் ஜெயலலிதாவைப் போயஸ் தோட்டத்தில் சந்தித்து வருகின்றனர். கட்சிகளைக்கூட அவமதித்த ஜெயலலிதாவின் ஆணவம் பறந்து போய் இப்போது சங்கங் களைக் கூட சந்திக்கவேண்டிய பரிதாபம். எல்லாம் வழக்குகள் படுத்தும் பாடு.



★ தொடர்ந்து மு.கருணாநிதியின் இதயத்தில் இடம் பெற்றுவந்த இராம.வீரப்பன், இம்முறை கண்டிப்பாக ஒரு தொகுதியையாவது பெற்றுவிடுவார் என்று அவரது ஆதரவாளர்கள் கூறுகின்றனர். இரண்டு தொகுதிகள் வேண்டும் என்று கேட்டதாகவும் ஒரு தொகுதிக்கு ஒப்புக்கொண்டதாகவும் தெரிவிக்கின்றனர். செங்கல்பட்டு தொகுதியில் அக்கட்சியின் முக்கியப் பிரமுகர் ஜெகத்ரட்சகன் போட்டியிடுவார் என்று சொல்லப்படுகிறது.


★ திருநாவுக்கரசின் எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. இந்த முறை தி.மு.க. அணியில் இடம்பெறக் கூடும். ஆனால் தொகுதிப் பங்கீட்டில் சிக்கல். அவர் நான்கு தொகுதிகள் கேட்கிறார். தி.மு.க. ஒரு தொகுதியைத் தர ஒப்புக் கொண்டுள்ளதாம். திருநாவுக்கரசுக்காகப் புதுக்கோட்டைத் தொகுதியைத் தர தி.மு.க. எண்ணுகிறது. உதயசூரியன் சின்னத்திலேயே திருநாவுக்கரசு போட்டியிட வேண்டும் என தி.மு.க. தலைமை விரும்புகிறதாம். தன் கட்சியின் சார்பாக போட்டியிட நடிகை லதாவுக்கும் ஒரு தொகுதியைக் கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

★ சென்ற தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் நின்று பழனி தொகுதியில் வெற்றிபெற்றார் ம.தி.மு.க.வைச் சேர்ந்த கணேசமூர்த்தி. இந்த முறை அவர் தான் வெற்றிபெற்ற தொகுதியில் போட்டியிட விரும்பாமல் திருச்செங்கோடு தொகுதியில் போட்டியிட விரும்புகிறாராம். ஏன் இந்த மாற்றம் என்று கேட்டால் ஈரோட்டில் வீட்டை வைத்துக் கொண்டு பழனி பாராளுமன்றத் தொகுதியைக் கவனிப்பது சிரமமாக இருக்கிறது என்று பதில் வருகிறதாம்.

★ கருணாநிதி - வைகோ சந்திப்பின் போது, தொகுதிப் பங்கீடு பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசப்படவில்லையாம். தி.மு.க. ஆட்சியைக் கலைக்க ஜெ. எடுத்த முயற்சிகளையும் அதை எதிர்த்து தான் செய்த வேலைகளையும் வைகோ விளக்க, கவனித்துக் கொண்டே தான் இருந்தேன் என்றாராம் கருணாநிதி. பிறகு கருணாநிதி திருவாரூர் போய் வந்த நிகழ்வுகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்து விட்டுப் புறப்பட்டனராம். புறப்படுகிற நேரத்தில் தொகுதிப் பங்கீடு குறித்து ஒரு குழு அமைத்துப் பேசுவோம் என்றாராம் வைகோ. அப்படியே அறிவித்து விடலாம் என்று கருணாநிதி ஒப்புக்கொள்ள சந்திப்பு சுமுகமாக நடந்தேறியுள்ளது.

தொகுப்பு : *அ.தமிழ்க்குமரன்*

# உடைந்த மனமும் உதிரும் உயிரும்



உதடுகள் உச்சரிக்காவிட்டாலும்
உள்ளத்தின் ஓலம்
கண்களில் கசிந்துவிடுகிறது.
கடிவாளம் போடாத மனசு
எலும்புகளையும் சதைகளையும்
கண்ணீரால் குளிப்பாட்டுகிறது.

தாய்ப்பால் அருந்திய தன்மையான
நாட்கள்
புட்டிப்பாலில் முகம் நொறுங்கிக்
கதறுகின்றன.

வெப்பச் சொற்களில் வெடித்துக்
கிளம்பிய ஓசையைக் கேட்டு நடுங்கி
அன்புக் கவசம் தேடி ஓடின செவிகள்.


விதண்டாவாதங்களால் முறிந்த
முதுகெலும்பின் மேல்
அக்கினி முழக்கங்களின் அணிவகுப்பு.

வெட்டுண்ட கால்களில் பீறிடும்
குருதியைச் சுவைத்து
கோடை வெயிலின் கொடுமை
துறந்த கொக்கரிப்புச் சூடுகள்.

கறிக்கும் சாராயத்துக்குமான
வெட்டியானின் கனவைக் கலைத்தது
என்னையும் எதிர்பார்க்கும்
உன் கண்ணீர்த் துளிகள்.

அ.தமிழன்பன்

கிருஷ்ணன் - பஞ்சு, ராபர்ட் - ராஜசேகரன், சந்தான பாரதி - சக்தி கண்ணன், ஜே.டி. - ஜெர்ரி வரிசையில் இன்னொரு இரட்டை இயக்குநர்கள் கலைத்துறையில் காலடி எடுத்து வைக்கின்றனர். வேல்முருகன் - கார்த்திகேயன் என்ற இந்த இரட்டையர்கள் வேல்கார்த்திக் என்ற பெயரில் 'நேசம் புதுசு' படத்தை இயக்குகிறார்கள்.



பிரியா ராமன் - ரஞ்சித் ஜோடியாக நடிக்கும் இது ஒரு வித்தியாசமான கிராமத்துக் காதல் கதை. பொன்விலங்கு படத்தில் கதாநாயகனாக அறிமுகமான ரஞ்சித் இடையில் வில்லன் நடிகரானார். நேசம் புதுசு படத்தின் மூலம் மீண்டும் கதாநாயக நாற்காலியில் அமர்கிறார்.

சினிமாவின் கேமரா படாத நாமக்கல் பகுதியில் வளரும் ''நேசம் புதுசு படம் புதிய பாதை படத்தை போல் பரபரப்பான படமாக இருக்கும்'' என்கிறார்கள் இயக்குநர்(கள்) வேல்கார்த்திக்.

*(புதிய பாதை படத்தையே மறுபடி எடுக்காமல் இருந்தால் சரிதான்!)*

'ஒருவன்' பட ஆடியோ கேசட் வெளியீட்டு விழாவில் படத்தின் இயக்குநர் சுரேஷ் கிருஷ்ணா பற்றி கே.பாலசந்தர்...

என்னிடம் எத்தனையோ உதவியாளர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களில் பலர் இயக்குநராகவும் வளர்ந்திருக்கிறார்கள். அவர்களில் புத்திசாலியான உதவியாளர் சுரேஷ் கிருஷ்ணாதான். என்னிடமிருந்து இவர் பல விசயங்களைக் கற்றுக்கொண்டிருக்கிறார். இவர் என்னிடமிருந்து கற்றுக்கொள்ளாத ஒரே விசயம் என்னுடைய கோபம்.

''என்னுடைய உதவியாளராக இருந்தவர் என்றாலும் இவருடைய படங்கள் என் படங்களையே மிஞ்சி விட்டன என்று சொன்னால் மிகையில்லை. சுரேஷ் கிருஷ்ணா இயக்கிய முதல் படமான 'பிரேமா'வைப் பார்த்த போது எனக்கு இதுதான் தோன்றியது. இப்போது 'ஒருவன்' படத்தில் பாடல் காட்சியை பார்க்கும்போதும் இதுதான் தோன்றுகிறது'' என்று பாலசந்தர் பேசும்போது சுரேஷ் கிருஷ்ணா முகத்தில் வெட்கம்.

நன்றியுரையாற்றும்போது சுரேஷ் கிருஷ்ணா, பாலச்சந்தரின் புகழுரைக்கு தான் தகுதியற்றவன் என்பதைத் தன்னடக்கத்தோடு தெரிவித்தார்.

திரையுலகில் ஒரு பாலசந்தர் தான் இருக்கமுடியும். இன்னொரு பாலசந்தர் வரவே முடியாது. நான் அவருடைய உதவியாளனாக இருந்தவன், அவரிடம் தொழில் கற்றவன். ஆனாலும், அவர் போல் என்னால் படம் எடுக்க முடியாது. நான் இன்னும் 'எல் போர்டு'தான் என்றார் சுரேஷ் கிருஷ்ணா.

*(அக்மார்க் ஐஸ் என்பது இதுதானோ?)*

சினிமாக் காரர்களுக்கு முதலமைச்சர் நாற்காலி மீது எப்போதுமே ஒரு கண். இதில் இந்த மாற்றம் ஏனோ?

*(மூச்சு முட்டாம இருந்தா சரி...)*

மும்பையிலிருந்து தமிழுக்கு வரும் புதுக் கதாநாயகிகளின் 'காட் மதர்' யார் தெரியுமா? குஷ்புதான். மொழி, ஊர் புரியாமல் தவிக்கும் மும்பை வரவுகளுக்கு தேவையான உதவிகளை செய்கிறார் குஷ்பு. அதுமட்டுமல்ல அவர்களுக்கு சிபாரிசு செய்து பட வாய்ப்புகளையும் பெற்றுத் தருகிறார்.

குஷ்புவின் சிபாரிசில் சமீபத்தில் பலனடைந்தவர்கள் ஒருவன் பட நாயகி 'பூஜா பத்ரா' மற்றும் மோனிஷா என் மோனாலிசா பட நாயகி 'மும்தாஜ்'. இவர்களுக்கு தலா இரண்டு படங்களில் கதாநாயகி வாய்ப்பு கிடைக்கக் காரணமாக இருந்திருக்கிறார் குஷ்பு.

*(மும்பை நடிகைகளின் மூன்றாவது அணி?)*

ஆனந்த பூங்காற்றே படம் ரிலீஸ் ஆன மறுநாள் வி.சி.டி-யும் வெளிவந்து விட்டது. விஷயம் தயாரிப்பாளர் காஜா முகைதீன் காதுக்கு வர மனிதர் அதிர்ந்து போனார். உடனே காவல்துறையை அணுகினார். காவல்துறையினரோ வெடிகுண்டு கண்டுபிடிப்பில் பிஸி.

# மும்பை நடிகைகளின் மூன்றாவது அணி

சரத்குமாரும் விதிவிலக்கல்ல என்பதை அவருடைய சமீபத்திய மேடைப் பேச்சுகள் உணர்த்துகின்றன.

பேச்சைத் தொடங்கும்போது என் ரத்தத்தின் ரத்தங்களே என்பார் எம்.ஜி.ஆர்; கழக உடன்பிறப்புக்களே என்பார் கருணாநிதி; பாரதிராஜாவும் என் இனிய தமிழ் மக்களே என்பார்.

இதுநாள் வரை சாதாரணமாக பேசிவந்த சரத்குமார் இப்போது என் மூச்சான ரசிகப் பெருமக்களே என்று பேச ஆரம்பித்திருக்கிறார்.

காஜாமுகைதீனைக் கண்டுகொள்ளவில்லை. பெரிய இடத்து சிபாரிசு பிடித்து முதல்வரைச் சந்தித்து முறையிட்டிருக்கிறார். கைமேல் பலன். முதல்வரிடமிருந்து காவல்துறைக்கு உத்தரவு பறந்தது. வெடிகுண்டு தேடலோடு வி.சி.டி-யையும் தேடித் திரிந்தது காவல்துறை. கடைசியாகக் கிடைத்த தகவல் இதுவரை ஆயிரம் வெடிகுண்டுகள்... ஸாரி வி.சி.டி.க்கள் காவல்துறையால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

*(என்னே சுறுசுறுப்பு!)*

# நினைத்துப் பார்க்கிறேன்

பள்ளியிலிருந்து பத்திரிகைத்துறைக்கு காலடி பதித்த நாட்களை மீண்டும் நினைத்துப் பார்க்கிறேன்.

லண்டனுக்குச் சமீபத்தில் தனது மனைவியோடு வந்து தங்கியுள்ள அந்த மாமனிதரே என் வாழ்வின் கடந்து விட்ட காலத்தின் சில பக்கங்களை புரட்டிப் பார்க்க வைத்தவர்.

சிறு வயதில் தந்தையை இழந்து- நான்கு வயது கூட ஆகா தகடைசித் தங்கை உட்பட ஐந்து உடன் பிறப்புகளுக்கு மூத்தவனாக அம்மாவுடன் குடும்பச் 'சுமை'யைப் பொறுப்பேற்று- குடும்பத்துக்காக வாழ்வையே 'தியாகம்' செய்வது போன்ற 'மாயை'க்குள் மூழ்கியிருந்த காலம்.

தமிழீழத்தில் இன்று இளைஞர்கள் நடத்தும் தியாக வேள்வியின் முன்னால் அன்றைய எனது 'தியாக'த்தையெல்லாம் நினைக்கிறபோது எனக்குள்ளேயே மௌனமாகச் சிரித்துக் கொள்வேன். அந்த மாவீரர்களின் தியாகத்துக்கு நிகர் எதையாவது சொல்ல முடியுமா?

'இந்து மகாகடல் சிந்து மகா குருதியால் இங்குமோர் செங்கடல் ஆகினும் தமிழீழம் 'ஈழம்' என்றே அலை பாயும்- இனம் ஆர்ப்பரித்து எழும்- விலங்குகள் அறுந்திட வேங்கைகள் கொடி பறக்கும்' என்று புதிய தமிழீழ தேசம் அமைத்திட லட்சோப லட்சம் தமிழர்களின் கரங்களைப் பிணைத்துக் கொண்டு போராடும் ஒரே தலைவனுக்கு ஆரம்ப காலத்தில் கிடைத்த சொத்துத்தான் அந்த மாமனிதர்.

லண்டனில் உயர்கல்வி பயில வேண்டும் என்று என் தங்கைக்கு வந்த விருப்பம்- 27 ஆண்டு காலத்துக்கு முன்னர் எங்கள் சக்திக்கு கொஞ்சம் கூடுதலானதாகத் தான் எனக்கு இருந்தது. ஆனாலும் அந்த நேரத்தில் எப்படியாக அவள் லண்டன் வந்து படிக்கலாம் என்பதற்கு ஆலோசனை சொல்லியிருந்தாலும் பெரிதாக எடுத்திருக்க மாட்டேன்.

படிக்கப்போகும் அவள் என்ன செய்ய வேண்டும் என்று விளக்கி- அமெரிக்காவில் டாக்டராகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற அயலவர் 'ஸ்பொன்சர்' கடிதத்தை எப்படி எழுத வேண்டும் என்று தானே அழகாக ஆங்கிலத்தில் 'ரைப்' செய்து தந்து- என்னோடு சில மணி நேரத்தை செலவு செய்த அந்த மனிதர் என்னுள் நிரந்தரமாக வாழும் சிலருள் ஒருவர்.

கொழும்பில் இருந்தும்- பின்னர் கண்டியில் இருந்தும் 'செய்தி' என்ற வாரப் பத்திரிகை ஒன்று அந்தக் காலத்தில் பரபரப்பாக வெளிவந்து கொண்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் தமிழர் கூட்டணி கொடி நாட்டிப் பறந்த சமயம் அது. 'கோட்டைக்குள் குத்து வெட்டு' போன்ற யாழ்ப்பாணத்து உள் அரசியலைப் பிய்த்து எழுதுகிற செய்தியாளனாகப் பணியாற்றிக் கொண்டு இருந்தேன். அந்தப் பத்திரிகையில் வாரா வாரம் 'பிரம்மஞானி' என்பவர் மனிதர்களின் மனோதத்துவத்தை சுவையான கட்டுரைகளை எழுதிக் கொண்டு வந்தார். பலரும் விரும்பிப் படிக்கிற அம்சம் அது.

அப்போது கொழும்புக்கு ஏதோ அலுவலாகச் சென்ற நான்- 'செய்தி' ஆசிரியராக இருந்து இப்போது அமரராகிவிட்ட பெரி. சுந்தரலிங்கம் அவர்களைச் சந்தித்து என் தங்கை லண்டன் போக விரும்புகிற விஷயத்தைச் சொன்னேன். அவர்தான் எனக்கு அப்போது கொழும்பில் பிரிட்டிஷ் தூதரகத்தில் தகவல் பிரிவில் கடமையாற்றிக் கொண்டிருந்த ஸ்ரனிஸ்லாஸ் என்பவரைப் போய்ச் சந்திக்கும்படி கூறினார். வீரகேசரியில் தன்னோடு பணியாற்றியவரென்றும்- 'செய்தி'யில் 'பிரம்மஞானி' என்று எழுதுபவர் என்றும் அவரைப் பற்றிச் சொல்லிவிட்டு உடனடியாக போன் செய்து அவருக்கு என்னை அறிமுகமும் செய்து வைத்தார்.

பிற்காலத்தில் கொழும்பில் பிரபல வழக்கறிஞர் சத்தியேந்திராவுக்கு 'ஜூனியராக' இருந்து- தமிழகத்தில் நிரந்தரமாகத் தங்குவதற்கு தனது மனைவியுடன் சென்ற சில காலத்தில் பெரி. சுந்தரலிங்கம் மாரடைப்பினால் மரணமானது என் மனதை நோக வைக்கும் சோகமான செய்திகள்.

கொழும்பு காலி வீதியில் பல மாடிகள் கொண்ட உயர்ந்த கட்டடத்தில் ஐந்தாவதோ ஆறாவதோ மாடியில் ஸ்ரனிஸ்லாஸைப் போய்ப் பார்த்தேன்.

இன்றும் அவர் என் மனத் திரையில் வாழ்ந்து கொண் இருக்கிறார். இந்தக் குறுந்தாடிக்காரர் மிக அழகாக வெள்ளை உடை உடுத்தியிருந்தார்.

என் குடும்பத்தைப் பற்றி எல்லாம் விபரமாக கேட்டறிந்தார். என் தங்கை லண்டனுக்குப் போய் படிப்பது இலகுவானது என்பதை மனதில் பதிய வைத்தவர் அவர்தான்.

வெளியே கூட்டிச் சென்று- தூதரகத்துக்கு முன்னால் அமைந்திருந்த தமிழ்க் கடையில் தேனீர் வாங்கித் தந்து சிரித்துக் கதைத்துவிட்டு- மீண்டும் என்னை தனது அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று என்னென்ன செய்ய வேண்டும் என்று ஒரு தாளில் குறித்துக் கொள்ளும்படி சொன்னார்.

லண்டனில் பல்வேறு துறைகளிலும் படிக்க விரும்புகிற பாடசாலைகளின் பட்டியல் ஒன்றை தந்தார். அங்கு பணம் கட்டி 'அட்மிஷன்' ஒன்றை எடுக்க வேண்டும். இன்னொரு முக்கியமான 'ஸ்பொன்சர்' கடிதத்தின் மாதிரியையும் தந்தார். கொழும்பு தூதரகத்தில் நேர்முக 'இன்ரர்வியூவில்' எப்படி அதிகாரி முன் என் தங்கை எப்படிப் பதில் சொல்ல வேண்டும் என்பதையும் கூறத் தவறவில்லை.

லண்டன் வந்து- படித்து - இப்போது பெரிய குடும்பமாக தங்கை வாழ்ந்து கொண்டிருப்பது வேறு கதை.

இன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை நடத்திக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்தான் அன்று எனக்கு கை கொடுத்த ஸ்ரனிஸ்லாஸ். மாபெரும் தலைவன் பிரபாகரனின் சிறப்புத் தூதராக அவர் லண்டன் வந்திருப்பது பெருமையாக இருக்கிறது. தலைவரின் உணர்வுகளை நன்கு புரிந்த ஒருவர் நம்முடன் இருப்பது நமக்கு எல்லாம் நல்ல பலமல்லவா. 0

ரூட்டிங்கில் முதல் தரமான சாறிக் களஞ்சியம்

# GEETA SAREES

**SPECIALISES IN WEDDING SAREES**
**PRINTED SAREES WOOLEN SHAWLS**
**JEWELLERY ETC**

பண்டிகையா! திருமணமா!
நல்ல நாளா! என்ன கோலம்!
என்னென்ன ஜாலம்!
இங்கு வந்தால்
கல்யாண மேளம்தான்!



## கீதா சாறீஸ்

231 Upper Tooting Road,
London SW17

☎:
0181 672 0208

லண்டனில் முதலாவது தமிழர் நகைமாளிகை
Specialist in 22 ct. Gold Jewellery



Creates the New Woman

**Western Jewellers**

230 UPPER TOOTING ROAD
LONDON SW 17 7EW
Tel : 0181 767 3445

வாரத்தில் ஏழு நாள்களும் திறந்திருக்கும்

Cover Desigen by: Third Eye, Printed by VASAN 0181 - 646 2885